Regd No. M. 4900 16 பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 ஈரோடு 18-12-1948 சனிக்கிழமை மலர் 15.

## இந்திப் பெண்ணுக்கு இங்கென்ன வேலை?

[அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா]

தரவு.

சூரியனைத் துதிக்கச்செய் தொழும்பர்தஞ் சொற்கேட்டு
ஆரியத்தின் வேற்றுருவை அறிவரெவ ரென்றெண்ணி
சீரியநந் தமிழ்கெடுக்கச் சிறுக்கிநீ தருக்கிவந்தால்
வீரியத்தின் வித்துடைய வில்லேந்து நீள்புருவக்
கூரியநல் வாளேந்திக் கோதையரே படைவகுத்துப்
போரியக்கி யுனைவென்று பொன்வாகை சூடாரோ

தாழிசை

முன்னைநாள் வந்துநீ மூக்கறுந்து திரும்பிவிட்டாய்
என்னைநீ வந்ததுதான் இன்றிங்கே வியப்பன்றோ
அன்னைக்குக் கேடுதர அறிவிலரும் விரும்புவரோ
சென்னைதன் மந்திரிகள் தென்னாட்டில் பிறந்திலரோ
சாத்திரத்தில் காணுகின்ற சண்டாள னென்றசொல்லும்
சூத்திரன் என்ற சொல்லும் சுட்டெரித்துக் கரியாக்கி
ஆத்திரம் தணிந்துநின்ற அப்பெரியார் தன்கூட்டம்
மாத்திரந்தான் எதிர்க்குமென்று மந்திரிகள் செப்பினரோ
கருப்புநிறக் கொடிகொண்ட கழகத்தார் தானெதிர்ப்பார்
விருப்புடனே எல்லோரும் வேண்டிடுவார் என்றாரோ
நெருப்பணைக்க எல்லோரும் நெருங்குவது போலாங்கு
தெருப்புழுதி மேலோங்கத் திரண்டபடை காணாரோ

நாற்சீர் ஈரடி யிரண்டம்போதரங்கம்.

துன்னுபுகழ் இளங்கோவின் தூயவொரு சிலம்பினுக்கு
உன்னுடைய நூலெல்லாம் ஒப்புரைத்தல் சாலாதே
மெய்ப்பொருளைக் காணுகின்ற மேன்மை குறள் தன்னின்
துய்யவடி காலினுக்குன் தளசிறூல் காணாதே

நாற்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்.

இலக்கண மொன்றும் ஏந்தினா யில்லை, இலக்கிய மொன்றும் இயற்றினா யில்லை
துலக்கிய கருத்தொடுந் தோன்றினா யில்லை, விலக்கிய மொழியின் வேறொன் றில்லை

முச்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்.

வந்தே மாதரம் ஜெய்ஹிந், வெந்தே போகுது வேண்டாம்
எந்தாய் நாடு வாழ்க, செந்தேன் பாயுது காதில்

இருசீர் ஓரடி எட்டம்போதரங்கம்.

குணமுனக் குண்டோ, மணமுனக் குண்டோ, நூலுனக் குண்டோ, காலுனக் குண்டோ
அறிவுனக் குண்டோ, நெறியுனக் குண்டோ, உருவுனக் குண்டோ, திருவுனக் குண்டோ

ஆகலின்,

ஒரு விகற்ப ஆசிரியச் சுரிதகம்.

செந்தமிழ் நாட்டினுள் சிச்சி நீவரேல், முந்தை வந்தே மூக்கை யிழந்தாய்
விந்தை பின்னும் விரும்பிநீ வாரல், இந்தி மாதே என்னே
**சொந்த நாட்டில் துணையுனக் கிலையோ.** **—செய்யுட் பித்தன்.**

# கிழக்கு லண்டன்?

☆

உலகில் மிகப்பெரிய மூன்றாவது நகரம், ஜப்பான் சாம்ராஜ்யத்தின் தலைநகர், டோக்கியோ. கடந்த உலக மகாயுத்தத்தின் போது அச்சு நாடுகள் என்று கருதப்பட்டவைகளில் ஜப்பான் முக்கியமானதாகும். கடந்த யுத்தத்தில் ஜப்பான் தோற்றுவிட்டது. அதுபோது அதன் தலைநகர் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அவ்வளவு பாதிக்கப்பட்டும் அத்தனை பெரிய நகரில் அது அவ்வளவு சேதமாகத்தோன்றவில்லை. ஆசியாவும் ஐரோப்பாவும்சேர்ந்த தற்கு யூரேஷியா என்று பெயர். அந்த யூரேஷியாவில் மேற்கில் எப்படி லண்டன் நகரமோ அதுபோல கிழக்கில் டோக்கியோ நகரம் எல்லாத்துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வருகிறது. உலக சரித்திரத்தைப் பெரும்பாலும் கற்று வருகின்ற நாம், உலகின் மூன்றாவது பெரிய நகரமான டோக்கியோவைப்பற்றியும் சிறிது அறிந்து கொள்ளலாமல்லவா?

ஜப்பான் சாம்ராஜ்யத்தின் முக்கிய தீவாகிய ஹொன்சு என்ற தீவில் அதன் தலைநகரமான டோக்கியோ இருக்கிறது. ஜப்பானின் முக்கிய வியாபார ஸ்தலம், தலைமை அலுவலகங்கள், தொழிற்சாலைகள் முதலிய எல்லாம் தலைநகரிலேயே அமைந்திருக்கின்றன. டோக்கியோ நகரம் சுமார் 250 சதுர மைல்களைக் கொண்டது. இந்நகரத்திற்குள் நூற்றுக்கு மேற்பட்ட குன்றுகள் ஐம்பதிலிருந்து நூற்றெண்பது அடி உயரம் வரையில் உள்ளதாக இருக்கின்றன. டோக்கியோ நகரம் அவ்வளவு பெரியதாக ஆக்கப்பட்டது 1932ம் ஆண்டில். அய்ந்து சிறு நகரங்களையும் 82 கிராமங்களையும் சேர்த்து 220 சதுர மைல்களைக் கொண்டதாக அப்போது அமைக்கப்பட்டது. அதனுடைய ஜனத்தொகையும் அதிசீக்கிரம் 1932ல் 7,000,000 (எழுபது லட்சம்) வரை அதிகரித்தது. அந்தக் கணக்குப்படி உலகத்தின் மூன்றாவது முக்கிய நகரமாக இருந்து வருகிறது.

டோக்கியோ நகரம் மிக ஆழமான பரந்த துறைமுகமாகவும், கிழக்கில் அதற்கு ஈடான வேறு துறைமுகங்களில்லையென்று கூறும் வகையில் விளங்கி வருகிறது. ஒரே சமயத்தில் ஏராளமான கப்பல்கள் தங்கும்படியாக அதன் துறைமுகம் அமைந்திருக்கிறது. டோக்கியோவுக்கு 18 மைல் தூரத்தில் மேற்கேயுள்ள யோககாமா நகரம் ஜப்பானின் முக்கிய வியாபாரத் துறைமுகம். யோகோசுகா என்னும் நகரம் சிறந்த கடற்படை ஸ்தலம்.

டோக்கியோ கடந்த எண்பது ஆண்டுகளாக ஜப்பானின் தலைநகரமாக இருந்து வருகிறது. கி. பி. பதினாறாம் நூற்றாண்டு வரையில் டோக்கியோ எடோ என்ற பெயரில் ஒரு சிறு, முக்கியமற்ற கிராமமாக இருந்து வந்தது. கி. பி. 1603-ல் யோகோகாவின் ரோருன் என்ற அரசகுடும்பம் அரசபீடமேறிய போது எடோவை அதிகார மற்ற தலை நகராக ஆக்கிக்கொண்டனர். ஜப்பானின், சக்கரவர்த்தி சத்திய மார்க்கத்திற்குத் தலைமை தாங்கியிருந்த யோகிடோ என்ற நகரில் வாழ்ந்துவந்தார். 1542-ல் போர்ச்சுகீசியக் கப்பல்கள் ஜப்பானுக்கு வர ஆரம்பித்த பிறகுதான் ஜப்பான் நாடு மேற்கத்திய நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முற்பட்டது. அரசியல், வியாபாரம், மதம் முதலிய துறைகளில் மேற்கத்திய நாடுகளோடு தொடர்பு கொண்டு மிக வேகமாக முன்னேறத்தலைப்பட்டது. மற்ற நாடுகளோடு, ஜப்பான் நாடு தொடர்பு வைத்துக் கொள்வதைப் பார்த்து அரசகுடும்பத்தினர் பயந்தனர். அதனால் தங்கள் நேரடி ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களை மற்ற நாடுகளின் தொடர்பிலிருந்து வெட்டிக்கொள்ளப் பிரயத்தனம் செய்தனர். கி. பி. 1624-ல் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக, ஜப்பானியர் வேறு நாடுகளில் குடியேறும் படியான நிலையும், வேறு நாட்டினரைத் தங்கள் நாட்டில் குடியேற அனுமதிக்கும் படியான நிலையும் ஏற்பட்டது. மேற்கத்திய நாட்டைச்சேர்ந்த டச்சுக்காரர்களுக்கு வியாபாரத்தில் மட்டிலும் ஓர் அளவு சில சலுகைகள் கொடுக்கப்பட்டன.

மத்தேயு பெரி என்ற அமெரிக்கக்கப்பல் தலைவர், டோக்கியோவுக்குச் சென்று அந்த அரசாங்கத்தின் பிரியப்படி, அந்நாட்டின் வெளி நாட்டு வியாபார நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளும் காலம் வரை, சுமார் இரண்டரை நூற்றாண்டுகள் ஜப்பான் அரசாங்கத்தில் சரியான நிர்வாகம் நிலைக்கவேயில்லை. இது நடந்த சில வாண்டுகளுக்குள் சோகுன் அரசவம்சத்தினர் நாட்டை சாம்ராஜ்யமாகப் பெருக்கிக் கொண்டனர். எடோ என்ற கிராமம் டோக்கியோ என்ற பெயரில் ஜப்பானின் தலைநகரமாக்கப்பட்டது.

பூகோள அமைப்புப்படி டோக்கியோ மிகவும் குறைந்த அனுகூலங்களையே கொண்டிருக்கிறது. டோக்கியோவின் சீதோஷ்ணம், மக்களின் தேவைக்குத் தகுதியானதாக இல்லை. கோடையில் மிகவும் உஷ்ணமாக பாலைவனத்திற்குச் சரியான உஷ்ணத்தைக் கொண்டதாகவும், குளிர் காலத்தில் நீர் உறையும் படியான அளவுக்குக் குளிராகவும் இருக்கிறது. ஜப்பான் நாடே சங்கிலி போன்ற தீவுகளைக் கொண்டது. அத்தீவுகளில் அதிகமான எரிமலைகளிருக்கின்றன. பூஜியாமா என்ற எரிமலை ஜப்பானின் தேவதையாகக் கொண்டாடப்படுகிறது. வருடத்திற் கொருமுறை ஆயிரக்கணக்கான ஜப்பானிய யாத்திரிகர்கள் வெள்ளையுடையில் பூஜியாமாவுக்குச் சென்று வணங்கிவிட்டு வருகின்றனர்.

ஜப்பான் பூகம்பத்திற்குப் பெயர்போனது. சராசரி தினமும் நான்கு தடவை பூகம்பங்கள் உண்டாகிறதாம்! இவைகளினால் மக்கள் அவ்வளவாகப் பாதிக்கப்படுவதில்லை. ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கொருமுறை பயங்கரப்பூகம்பங்கள் ஏற்படுவதுண்டு. 1923ல் டோக்கியோவில் மூன்றில் ஒரு பாகம் பூகம்பத்தினால் எழுந்த தீயினால் அழிந்துவிட்டது. பிறகு வெகு சீக்கிரமே புதுப்பிக்கப்பட்டுவிட்டது.

டோக்கியோ நகரம், ஆளுவதற்குச் சாதகமாக இருப்பதற்காக பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 'யமநோட்' என்ற

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)




காட்சி 10.

[முதலியார் வீடு.]

உறுப்பினர்:— பத்மா, விஸ்வன், முதலியார், விமலா.

கதை அமைப்பு:— [விஸ்வன் தன் அக்காள் மூலம், விமலாவை மணக்கும் முயற்சியில் வெற்றி அடைகிறான்.]

பத்மா:- [தன் அறையில் பாடிக் கொண்டிருக்கிறாள்.]

(6) [பாட்டு: 'ஆண்க்யாமி லாக்கே......' என்ற மெட்டு]

பாழும் காலமிதே ஏழைப்
பெண்கள் வாழ்வதெங்கே
சாங்கிழம் ஆவலோடு கன்னிப்
பெண்ணைக் கோருதிங்கே
வஞ்சமிருங்காளை லஞ்சம்
கோரும் வேளை
வயோதிகர் வாரார்
ஆ வயோதிகர் வாரார் (வஞ்)
வாலிபர் காதல் நாடும்
மோகக் கன்னி நோக வாரார்
பெண்ணையே போம்பண்ணும்
செல்வம் அழிந்து போபோ (வஞ்)

விஸ்வன்:- [வரும்போதே] என்ன அக்கா! பாட்டு வெகு அருமையாக இருக்கிறதே?

பத்மா:- ஏண்டா இருக்காது...? எல்லாம் இருக்குமிருக்கும்!!

விஸ்வன்:- சரி. அதிருக்கட்டும்! முதலியார் என்ன நோக்கத்தில் இருக்கிறார்?

பத்மா:- என்ன......! நோக்கமா?

விஸ்வன்:- அதுதானக்கா...... விமலாவை எனக்குக் கலியாணம் செய்து கொடுக்கிற விஷயமாய்க் கேட்கிறேன்...?

பத்மா:- ஓ! அதைக் கேக்கிறியா? அதெல்லாம் எப்பவோ முடிஞ்சு போச்சு!

விஸ்வன்:- ஆ...ங்! முடிஞ்சு போச்சா...?

பத்மா:- ஏண்டா இப்படி முழிக்கிறே...?

விஸ்வன்:- [தனக்குள்ளாக] என்ன சொன்னாய்...? முடிந்து விட்டதா....? யாருக்கு...? ஆம்! நான் அப்போதே நினைத்தேன்! அந்தப்பயல் ராஜனுக்காகத்தான் இருக்கவேண்டும்...! [பத்மாவை நோக்கி] ஏன்...? அப்படித் தானே...???

பத்மா:- தம்பி! நீ என்ன நினைத்துக்கொண்டு இப்படி எல்லாம் கோவிக்கிறாய்?

விஸ்வன்:- தம்பி? த்தூ....! நீ ஒரு அக்காள் தானா? என்னைத் தம்பி என்று கூப்பிட உனக்கு வெட்கமாயில்லை? நீ அந்தக் கிழட்டுப் பயலுக்கு மனைவியாக இருந்து என்ன பிரயோசனம்?

பத்மா:- ஏண்டா! என்னை அவருக்குக் கலியாணம் செய்து கொடுத்ததை நினைந்தா கோபப்படுகிறாய்? அதெல்லாம் எந்தக் காலத்திலோ முடிந்துவிட்டது! இப்ப எண்டா திடீரென்று அதை நினைக்கிறே...?

விஸ்வன்:- ஆம்! உன்னை அந்தக் கிழட்டுப்பயலுக்குக் கலியாணம் செய்து கொடுத்தது! விமலாவையும் அவள் மூலம் அவனுடைய திரண்ட ஐஸ்வரியங்களையும் அடைவதற்காக என்பதை மறந்துவிட்டாயா...?

பத்மா:- அடா சுயநலப் பிசாசே! நீ குபேரனாக வாழ என்னையும், என் வாழ்க்கையையும் இந்தக் கிழவனுக்குப் பலியிட்டாயே...! அதை நான் மறக்க முடியுமா...? அந்தக் கொடுமையைத்தான் ஒவ்வொரு நாளும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேனடா...!

விஸ்வன்:- அப்படியானால், என்னைப் பழிவாங்குவதற்காகவா விமலாவை வேறொருவனுக்கு நிச்சயிக்கும்படி விட்டு விட்டாய்...?

பத்மா:- என்ன! விமலா வேறொருவனுக்கா...? யார் சொன்னா...?

விஸ்வன்:- நீதானே 'எப்பவோ முடிஞ்சு போச்சு' என்று சொன்னே...?

பத்மா:- அடச்சே! உனக்குத் தானேடா 'முடிஞ்சு போச்சு' என்று சொன்னேன்!

விஸ்வன்:- போக்கா போ! நீ தெளிவாய்ச் சொல்லாததால் நான் பயந்தே போய் விட்டேன்...! அதற்குத் தோதா...... எவனோ அவள் சிநேகிதனாம்... ராஜன் என்று ஒரு புதுப்பேர்வழி இன்று மில்லில் வேலைக்கு வந்து சேர்ந்தான்...அவன் அங்கு வந்ததிலிருந்து எனக்குப் பல விதமான சந்தேகங்கள் உண்டாகி விட்டன. சரி. எப்படியும் கலியாணத்தைச் சிக்கிரம் நடத்தி விடுவதுதான் நல்லது என்று நினைக்கிறேன்...!

பத்மா:- ஆமாண்டா தம்பி! அந்த ராஜன் மீது அவளுக்கு ரெம்பப் பிரியம் போலிருக்கு! அவள் பரிட்சையில் தேரப் பாடமெல்லாம் அவன்தான் சொல்லிக் கொடுத்தானாம்! சதா அவள் அப்பாவிடம் அவன் பெருமையைத் தான் பேசிக்கொண்டே இருக்கிறாள்!

விஸ்வன்:- அப்படியானால், நாம் சிக்கிரம் முடித்துக் கொள்ளாவிட்டால் காரியமே கெட்டு விடும் போலிருக்கிறதேக்கா...?

பத்மா:- இந்த பத்மா இருக்கிற வரையில், உனக்கு ஒரு பயமும் வேண்டாம்.

விஸ்வன்:- அந்த நம்பிக்கையைத்தானேக்கா என் உயிருக்குப் பதிலாகச் சுமந்து கொண்டிருக்கி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

# விதவையின் குமுறல்!

போட்டி

எண் 1

வெகு நேரம் வரை அந்தக் கடற்கரையிலுள்ள புல் திட்டின்மீது உட்கார்ந்திருந்ததால் எனக்கு மிகவும் அலுப்பாக இருந்தது. மெதுவாக எழுந்து நடந்தேன். தூரத்தில் எங்கிருந்தோ வந்த சங்கநாதத்தின் ஒலி, என் காதைத் துளைத்தது. கடலிலுள்ள மீனினங்களும் மணிகளும் என்னை வாவென அழைப்பது போல் சலசலவென்று சப்தப்படுத்திக்கொண்டிருந்தன.

எனக்கு எதிலும் மனம் செல்லவில்லை. கடற்கரையில் எங்கு நோக்கினும் தம்பதிகள் சகிதமாய் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். இந்த உலகத்தில் நான் மட்டும் தனி! நான் என்ன இளம்யுவதி அல்லவா? பின் ஏன் நான் மட்டும் அவர்களைப் போல் இருக்கக்கூடாது? வாழ்க்கையில் ஆண்களைப் போல் பெண்களும் இருந்தால் குடி முழுகியா போய் விடும்! எனக்கோ இப்போது வயது 22 தானாகிறது. அதற்குள் என்னை என்னென்ன சித்திர வதை செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து விட்டார்கள்! சமூகம் சமூகம் என்பதெல்லாம் பெண்களுக்குத்தானா? ஏன் என்னை அவ்வளவு சிறு வயதில் கல்யாணம் செய்து கொடுத்தார்கள்! என்ன அக்கிரமம்! 14 வயதில் நான் என்ன இவர்களைக் கல்யாணம் செய்து கொடுக்கச் சொன்னேனா? இந்தக் கேள்வியை நான் கேட்டால்...சமூகம் என்னைப்பார்த்துச் சொல்கிறது. உன்னை நான் 20 வயதில் விதந்துவாகப் போகச்சொன்னேனா என்று? இதற்கு என்ன அர்த்தம் என்று அப்பா அம்மாவைக்கேட்டால், விதிக்கு என்ன செய்ய முடியும்! உனக்கு நல்ல இடம் பார்த்துத்தான் கொடுத்தோம்! பெயருக்கென்ன குறைச்சல்! மன்மதனாகத்தான் இருந்தான்! வயதோ சமவயது பி. ஏ. படித்தவன். நல்ல பணக்கார இடம். மாமன் மாமியோ, குணத்தில் தங்கக் கம்பிதான்! என்று அளக்கிறார்கள். நான் என்ன செய்வேன்? விதியாம் விதி! இது எப்படி இருக்கிறது. இந்தப் பாழும் சமூகத்தில் மறுமண உரிமை இல்லை. நான் மட்டும் இந்த வாழ்க்கையில் விருப்பமில்லாமல் பொதுத்தொண்டு செய்ய ஆசைப்படுகிறேன். ஆனால் என்னை இந்த சாதி சமூகம் விடுகிறதா? உடும்பைப் போலல்லவா பிடித்துக்கொண்டிருக்கிறது. இதை எப்படி உதறித்தள்ளி விட்டுப் போவது என்பதுபற்றி யோசிக்காமலில்லை, செய்து என்ன பயன்?

எனது கணவர் கூடப்பிறந்தவர்—கணவருக்கு அண்ணாதான்! 20 வயதே நிரம்பப்பெற்ற இந்தப் பெண்ணை நாம் சமூகச் சிறையில் வைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது, ஏன் அப்படிச் செய்யவேண்டும்? அதனுடைய ஆசையெல்லாம் பொதுத்தொண்டில் இருக்கிறது, அப்படியே விட்டுவிட்டால் அதன மனத்திற்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்படுமென்று தன் தந்தையிடமே சொன்னார்! பாவம் அவர் என்ன செய்வார்...சமூகம் பொறுக்காதே அப்பா, சின்னஞ்சிறிய பெண்ணைத் தனிமையில் விடுவதை என்றார். அதற்கு மைத்துனர் ஒன்றுமே பேசவில்லை வருத்தத்துடன் போய் விட்டார்! எனக்காக அவர் அனுதினமும் பச்சாதாபப்படுகிறாரே தவிர, துணிந்து எதையும் செய்ய அவரிடம் திடம் இல்லை. போகட்டும் மறுமணத்தில் எனக்குப் பிரியமில்லை... இருப்பினும் ஆசையுள்ளவர்களாயிருந்தால்...தனது உணர்ச்சியின் வேகத்தில் என்ன என்னவோ செய்து கடைசியில் சிசுவை அழித்துத் திரைமறைவு வாழ்ந்து திண்டாடுவார்கள். ஏன்? பெண்களுக்கு மறுமண உரிமை இல்லாததாலல்லவா? பின் ஏன் ஆண்களைப் போல் பெண்களும் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது? எப்படியோ போகட்டும்.

என் கணவரே சொல்லுவார், சுநீதி! நீ பொதுத்தொண்டு செய்ய ஆசையுள்ளவளாக இருக்கிறாய். ஆதலால் நீ முன்னேற்றமடையக் கஷ்டப்பட வேண்டியதில்லை. நான் செல்லும் பொதுக்கூட்டங்களுக்கு நீயும் வாவென்று அன்புடன் அழைப்பார்! நானும் அவர்கூட பல கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். சில இடங்களில் சொற்பொழிவுகூட ஆற்றியிருக்கிறேன். என்ன செய்வது! என் கணவர்கூடச் செல்லும்போதே சிலர் சொல்லுவார்கள், நாய் மானங்கெட்டவளாம்! நிரம்பவும் துணிச்சல் காரியாம! ஆதலால்தான் வெட்கமில்லாயல் கூட்டங்களுக்குச் சென்று கணவருடன் சரிசமமாக உட்கார்ந்திருக்கிறேனாம்! அப்போதே தூற்றிய சனாதன சமூகம் என்னை இப்போது விடுமா?...என் கணவர் இறந்து இரண்டு மாதங்கள் வரை, எனக்கு அனுதாபம் கூறிப் பல தோழர் தோழியர்கள் கடிதம் வரைந்து கொண்டிருந்தனர். அதற்கு நான் பேப்பரில் நன்றி தெரிவித்தேன். அதற்குச் சமூகம் என்னைச் சும்மா விட்டதா? மணாளனை வாரிக்கொடுத்து விட்டு, இந்த மானங்கெட்டவள் பேப்பரில் நன்றி செலுத்துகிறாள் என்று தூற்றிற்று. இது எப்படி இருக்கிறது? என் கணவரல்லவோ, இறந்துபோனார். அதைப்பற்றி எனக்கில்லாத கவலை இவர்களுக்கு என்னவந்தது! என்னை எப்படியாவது, தூற்றவேண்டுமென்பது சனாதனிகளின் கொள்கை, இருக்கட்டும், இதை என்ன நான் லட்சியம் செய்தேனா? இல்லை! இருப்பினும் கணவர் இறந்த 15ந் தினம் என்னை எவ்வளவோ சித்திரவதை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். நான் பூச்சூட்டிக் கொள்ளக்கூடாது! பொட்டு வைக்கக்கூடாது! நல்ல உடை உடுத்தக்கூடாது; நகை போடக்கூடாது! என்று என்னை எவ்வளவோ தொந்தரவு செய்தார்கள். அதற்கு நான் உட்படவில்லை. பேசாமல் எனது அறையில்போய்க் கதவைத் தாளிட்டு விட்டுப் படுத்து விட்டேன். எத்தனையோ பேர்கள், சுநீதி' சுநீதி! என்று அடித்துக் கொண்டார்கள். ஆனால் இந்தச் சுநீதியா ஏன் என்று கேட்பாள்?...எங்கெல்லாமோ தேடி கடைசியில் நான் இருந்த அறைக் கதவை இடித்த இடி! அடேயப்பா! சொல்லவே வேண்டியதில்லை. இரும்புக்கதவாயிருந்ததால் அது உடையவில்லை. இவர்களுடைய இத்தனை சத்தத்திற்கும் நான் ஒன்றுமே பேசவில்லை. பிறகு என் மாமா வந்து ஏன் அதைக் கூப்பிடுகிறீர்கள், தாலியை வேண்டுமானால் கழற்றிக் கொடுக்கச் சொல்கிறேன், வாங்கிப் போங்கள், வேறொன்றும் தொந்தரவு செய்ய வேண்டாமென்று சொன்னார்கள்.

அதற்கு வந்தஸ்திரிகள் முழுதுமே மூக்கில் விரலை வைத்துக் கொண்டு இப்படியும் உண்டா என்று ஆச்சரியப் பட்டார்கள்! எப்படியும் உண்டா என்று எனக்கு தெரியவில்லை. நான் மௌனமாகவே இருந்தேன். என் மாமா ஜன்னல் பக்கம் வந்து சுநீதி! என்றார். நான் மிகவும் தாழ்ந்த குரலில் என்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# கலையும் இளைஞர் நிலையும்!

[*]

கலையையும் மக்கள் நிலையையும் எண்ணுவதின் கருத்து அவ்வெண்ணம் உண்மையை உணர்ந்து நல்வழிப்படுத்தும் என்ற உறுதியால் தான். கலை என்பதன் பொருளைச் செவ்வையாக உணராமலேயே கலையை வளர்க்கப் பாடுபடுவதாகப் பறையடிக்கின்றனர் மக்கள் மன்றத்தில் ஒருசிலர். அதனை உண்மையென்றே நம்புகின்றனர் பலர். ஆடையற்ற மனிதனைக் காட்டிக் கேட்கும் பொழுது; மாற்றான் சூழ்ச்சியில் சிக்கி தான் விபசாரி மகன் என்று பெயர் வாங்காமலிருப்பதற்காக—அழகான ஆடை! பளபளப்பாக உடுத்தியிருக்கிறான்! மிக மிக மெல்லியது! என்று கூறி அறிவை அடகு வைத்த புத்தி இன்னமும் நம்மிடைப் போகாமலிருப்பதுவே விந்தை.

எது கலை? ஆராய வேண்டாமா? நாட்டிற்கு வேண்டிய கலை எது? உணர வேண்டாமா? ஆளுவோர் இதனைச் சிந்தித்துச் செயலாற்றவேண்டுவதன்றோ கடமை.

காவியம், ஓவியம், சிற்பம், பாட்டு, நடிப்பு, கணிதம், வானநூல், எழுதல், படித்தல் முதலிய பலவும் கலையெனலாம். கலை, களை, கழைஇவற்றின் ஒலிவேற்றுமையையும் பொருள் மாற்றத்தையும் அறியவேண்டும். கலை-வித்தை, களை-குற்றம்; கழை-மூங்கில்.

கலையை யுடையவர் கலைஞர். கலையென்பது உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்தால் எழுவது. அவ்வாறு உண்டாக்கப்பட்ட கலையை நம்மவர் பருக்கலையென்றும் நுண்கலை யென்றும் இரண்டாகப் பகுத்தனர்.

பருப்பொருள் கண்களால் கண்டு துய்க்கும்படி அமைவது. தச்சு, கொத்து முதலிய தொழில்களும் நிலநூல், இராசாயனம், விஞ்ஞானம் முதலியனவுமாகும்.

நுண்கலையென்பது மனத்தால் அறிந்து உணர்ந்து சுவைக்கத்தக்கது. சிற்பம், ஓவியம், இசை, இலக்கியம், நாடகம் முதலியன நுண்கலையே. இத்துறையில் சங்க இலக்கியங்கள் போற்றத்தக்கதாகும்.

தமிழர் இயற்கையில் பெருமித உணர்ச்சி மிகுந்தவர். போரென்றால் கொண்டாட்டம். போரில் வெற்றி அல்லது முகத்திலும், மார்பிலும் புண் ஏற்று மடிவது. இவையே தம் வாழ்க்கையின் பயன் என்று கருதினர். இவர்கள் போர்த்திறமையை நன்கு விளக்குவன சங்க இலக்கியங்களும்—தொல்காப்பியமுமாகும். இங்குஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பொருள் கலைப் பயிற்சியைப்பற்றியதாகும்.

இளைஞர்களுடைய நிலை என்ன? கலைப் பயிற்சி என்றால் என்ன? இளைஞர்களுக்கு அக்கலையை எவ்வாறு போதிப்பது என்பதை நாமும் அறியவேண்டும், நம்மை ஆள்பவர்களுக்கும் அறிவுறுத்த வேண்டும்.

கலையென்ற சொல்லில் இலக்கியம் இடம் பெற்றிருப்பதைமறத்தலாகாது. இலக்கியத்தில் பொய் இலக்கியமென்றும் மெய் இலக்கியம் என்றும் இரண்டு வகையுண்டு.

"பொருண் மரபில்லாப்
பொய்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகை
மொழியானும்"

இலக்கியம் தோன்றுமெனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இதனையறிந்த வள்ளுவர் 'கற்க கசடறக் கற்பவை, என்றார். "பொருள்மரபில்லாப் பொய்மொழியானும் என்பது (கட்டுக்கதை) ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை: ஓர் யானையும் குருவியும் தம்முள் நட்பாடி, இன்னவிடத்துச்சென்று இன்னவாறு செய்தனவென்று, அவற்றுக்கியையாப் பொருள்பட வருவன.

பொருளொடு புணர்ந்த நகைமொழியென்பது பொய்யெனப்படாது—தற்கால நவீனங்கள் என்று சொல்லப்படுபவற்றோடொக்கும்.

இளமைப் பருவத்தில் அறியாமை நிலையில் கவனம், கவர்ச்சி, பற்று ஏற்படுவதற்காகவே இத்தகைய பொய்யான இலக்கியங்களைப் போதிக்கலாயினர். அத்தகைய கதை; அறிவு நிரம்பப் பெற்றதும் கதிரவனைக் கண்ட இருள் போலவும் புரட்சிக் கவிஞரின் உரைக்குப் புறங்காட்டும் மூடப்பழக்க வழக்கம் போலவும் மறைந்து போகும். முன்னர் சொன்ன கதையையே பின்னரும் சொல்லிக்கொண்டிருந்தால் அல்லது இளைஞர்களுக்குப் பள்ளியில் கற்பித்துக் கொண்டிருந்தால் அது கலையை வளர்ப்பதற்கு மாறாகக் களையை வளர்ப்பதாகவே முடியும். குழந்தைகளுக்கு உடற்பயிற்சி யளிப்பதற்கு முன் மனப் பயிற்சியே அளிக்கின்றோம். கதைகள் சொல்வதன் மூலம் முதலில் கல்வியறிவைப் புகட்டுகிறோம். அப்பொழுது சொல்லப்படுங் கதைகள் பொய் இலக்கியத்தைச் சேர்ந்தவைதான். உள்ளம் மெழுகு போன்றது. (நிலம் போன்றது-மலர் போன்றது என்றுங் கூறுவர்) மெழுகு, அனல்பட்டால் இளகிப் பிறகு கெட்டியாகப் பற்றுகிறது. அதே போல இளைஞருள்ளமும் ஒன்றைப் பற்றினால் பசுமரத்தாணி போல் பதிந்து விடுந்தன்மையது. முதல் கோணினால் முற்றுங்கோணும். ஆதலால் எந்த ஒரு வேலையையும் தொடக்கத்தில் தான் முக்கியமானதென்று கருதிச் செய்யவேண்டும். இளமைப்பருவத்தில்தான் அவர்களைச் சரியான பக்குவத்திற்குக்கொண்டுவர முடியும். எந்த எண்ணமும் இளமைப் பருவத்தில் தான் ஆழமாகப் பதியும்.

ஆகவே நம்முடைய இளைஞர்களுக்குப் புகட்டுங் கல்வியில் நாம் விழிப்புடையவராக விருக்கவேண்டும். நம்முடைய குழந்தைகளுக்கு யாரையும் எந்தவிதமான கதையையும் சொல்லிக் கொடுக்க அனுமதிக்கக் கூடாது. நம்மவரில் படித்த காங்கரஸ் திராவிடர்களெல்லாம் அறியாமையின் அடிப்படையிலும், மூடக்கொள்கையில் மூழ்கியும், வைதீகக் குழியில் விழுந்தும் நம் முன்னேற்றக்கொள்கைகளை உட்கொள்ள முடியாவாறு நமக்கே முட்டுக்கட்டைகளாக இருப்பதற்கெல்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 50-ம் நாள் போர்.

சென்னை டிச. 9.

அறப்போர்த் தொண்டர்களான தோழியர் அலமேலு அம்மையார் தோழர்களான கலைச்செல்வன், சாளை கபீர், முனுசாமி, திராவிடமணி ஆகிய ஐவரும் முத்தியாலுப்பேட்டைக் கழகத் தலைவர் வீட்டிலிருந்து புறப்பட்டு, முத்தியாலுப் பேட்டைப் பள்ளியின் முன்பு 10-30 வரை ஒரு மணிநேரம் அமைதியாக மறியல் செய்தனர்.

பள்ளியில் நடைபெற விருக்கும் தேர்தலை முன்னிட்டு நாளை ஒரு நாள் மட்டும் தான் இந்தப் பள்ளியின் முன்பு மறியல் நடக்கும் என்பதையறிந்த பொது மக்கள் மிக உற்சாகத்தோடு திரண்டு வந்து தொண்டர்களைப் பாராட்டினார்கள். வழிநெடுகத் தாய்மார்கள் வாழ்த்துக் கூறினார்கள். சில தேசியத் தோழர்களும் தொண்டர்கள் திரும்பிவரும் போது கலந்து கொண்டனர்.

# எது வகுப்புவாதம்? யார் வகுப்புவாதி?

★

'பிரம்மாவின் முகத்திலிருந்து தோன்றியவர்கள் பிராமணர்—தோள்களிலிருந்து உதித்தவர்கள் க்ஷத்திரியர்—தொடைகளிலிருந்து பிறந்தவர்கள் வைசியர்—பாதங்களிலிருந்து உண்டானவர்கள் சூத்திரர்கள்'—என்று வேதங்கள் கூறுவதாக ஏட்டிலே மக்களில் பலரை இழிவாக எழுதியிருப்பது வகுப்புவாதம்! அதனையே நான்முகன் படைப்பென்று நாட்டிலே நவில்வோர் வகுப்புவாதிகள்! 'சாதிகள் ஒழியவேண்டும்; ஆனால் அந்தந்தச் சாதி மக்கள் தங்கள் தங்கள் குலத்தொழில்களையே கொண்டொழுக வேண்டும்' என்று தாழ்த்தப்பட்ட மக்களைத் தொழில் துறையிலே முன்னேறாவண்ணம் சூழ்ச்சியுரை புகலும் காந்தீயம் வகுப்புவாதம்! அதனையே வேதமாகக்கொண்டு, பகுத்தறியும் பண்பின்றி நாட்டிலே "ஹரிஜன சேவை" புரியும் தேசியத் தோழர்கள் வகுப்புவாதிகள்! தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வித்துறையிலே உயராவண்ணம் தனித் தொகுதி முறைக்குச் சாவு மணியடித்து, ஆரியருக்கு ஆக்கமளிக்கும் 'தகுதி, திறமை' என்ற முறையை நாட்டிலே புகுத்துவது—புகுத்த நினைப்பது வகுப்புவாதம்! அம்முறையினையே நீதியின் பேரால், நேர்மையின் பேரால், நாட்டிலே புகுத்துவோர், புகுத்த நினைப்போர் வகுப்புவாதிகள்! 'சாதி வித்தியாசமில்லாத சமுதாயம் ஏற்பட முடியாது. ஆண்டவன் படைப்பிலே ஏற்றத் தாழ்வுண்டு. பிராமணன் பிறப்பினாலும் தொழிலினாலும் உயர்ந்தவன். உலகம் உள்ளளவும் இந்த வேற்றுமையை மாற்றமுடியாது'-என்று பகுத்தறிவு பரவிவரும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே கூட, முற்போக்குப் பிராமணர் மாநாடென்று ஒரு மாநாட்டைக்கூட்டி அதிலே வாய்வீச்சு வீசுவது வகுப்புவாதம்! அதனை அப்படியே ஆதரிப்போர் அத்தனை பேரும் வகுப்புவாதிகள்! நகரங்களிலே அக்ரகார வீதி, ஹரிஜன் காலனி என்று பிரித்து வைத்திருப்பது வகுப்புவாதம்! அதனை அப்படியே பெயரிட்டழைப்போர் வகுப்பு வாதிகள்! கடைவீதிகளிலே பிராமணாள் காப்பி ஹோட்டல், பிராமணாள் சாப்பாட்டுக் கிளப் என்ற போர்டுகள் போட்டு வியாபாரம் நடத்துவது வகுப்புவாதம்! அதனை நடத்துவோர், நடத்த அனுமதித்தோர் அனைவரும் வகுப்புவாதிகள்! 'ஒரு பார்ப்பனனுக்கும் ஒரு திராவிடப் பெண்மணிக்கும் சம்பந்தம் உண்டாகிப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தகப்பனின் சொத்தில் அப் பிள்ளைகளுக்குப் பங்கு கிடையாது. ஆனால் பார்ப்பனத்தி ஒருத்திக்கும் திராவிட ஆடவனொருவனுக்கும் சம்பந்தம் உண்டாகிப் பிறக்கும் குழந்தைகளுக்கு, தகப்பனின் சொத்தில் பங்குண்டு'—என்று கூறும் இந்துலா (மனுநீதி) வகுப்புவாதம்! அச்சட்டங்களையே நாட்டு நீதி மன்றங்களில் இன்றும் நடமாட விரும்புவோர் சகலருமே வகுப்புவாதிகள்! ஜமீன்கள் ஒழியும் போது இனாம்களை மட்டும் (இனாம்கள் அனைத்தும் பார்ப்பனர்களுக்கே உரிமையானதாக விருப்பதால்) விட்டுவைக்க வேண்டும் என்று வாதாடுவது, அதனையே ஆதரிப்பது அத்தனையும் வகுப்புவாதம்! அதற்காக அல்லும் பகலும் பாடுபடுவோர் அத்தனை பேரும் வகுப்புவாதிகள்! சமஸ்கிருதம் (வடமொழி) தேவ பாஷை மற்றவையெல்லாம் நீச பாஷை எனக் கூறுவது வகுப்புவாதம்! அதை நம்புவோர் அனைவரும் வகுப்புவாதிகள்! கோவில்களில் பார்ப்பனர் மட்டும் கர்ப்பக்கிருகம் வரையிற் செல்லலாம் மற்றையோர் அதன் வாயிற்படி வரை தான் செல்லலாம் என்று கூறுவது, அமுல் நடத்துவது, வகுப்புவாதம்! அதை அனுமதிப்போர் அனைவருமே வகுப்புவாதிகள்! 'பிராமணன் விரும்பினால் சூத்திரர்களுடைய சொத்துக்களை எடுத்துக்கொள்ளலாம். சூத்திரன் பிராமணனுக்கு உழைத்துப் போடவே பிறந்தவன்' என்று மனுநீதி கூறுவது வகுப்புவாதம்! அதன் அடிப்படையிலேயே அரசாங்கச் சட்டங்கள் வகுத்தோர், அதனையே கடைப் பிடிப்போர் அனைவருமே வகுப்புவாதிகள்! நாட்டிலே இராமாயண, புராண, நாடகங்கள்-சினிமாக்கள் நடந்து கொண்டிருக்கும்போது இரணியன், போர்வாள், சர்வாதிகாரி போன்ற நாடகங்களுக்குத் தடை விதித்திருப்பது வகுப்புவாதம்! அதனையே அமுல் நடத்தும் அரசாங்கத்தார் வகுப்புவாதிகள்! (கம்ப) இராமாயணம் பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக இருக்கும்போது, இராவண காவியம் கடைகளிலே விற்பனைக்கும் இருக்கக் கூடாதென்று தடையுத்தரவு போடப்பட்டது வகுப்புவாதம்! அதற்கு உடந்தையாக இருந்தோர் எல்லோரும் வகுப்புவாதிகள்! அப்படியிருக்க, உரிமைக்காகப் போராட—நாங்கள் திராவிடர், திராவிடநாடு, திராவிடர் கழகம் என்று வைத்திருப்பது வகுப்புவாதமா? நாங்கள் தான் வகுப்புவாதிகளா?

**சீலன்.**

---

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 51-ம் நாள் போர்!

சென்னை டிச. 10.

இன்று முத்தியாலுப்பேட்டைபள்ளியின் முன்பு நடந்து வந்த மறியலில் கடைசி நாள். அதனால் ஏராளமான பொது மக்கள் கூடிவிட்டனர். வழக்கம் போல் அறப்போர் வீரர்கள் அய்வரும் கழகத் தலைவர் இல்லத்திலிருந்து புறப்பட்டு பள்ளிமுன்பு 9-30 முதல் 1 மணிநேரம், மறியல்செய்தனர்.

தொண்டர்கள் வரும் போதும் திரும்பும் போதும் வழிநெடுக உபசாரமும், பாராட்டுதலும் அமோகமாக நடைபெற்றது.

மாணவர்கள் பெருங்கூட்டமாக எதிர்ப்பொலி முழக்கி, இந்தி ஏடுகளைத் தீக்கிரையாக்கிப்பள்ளி சென்றனர். மாணவர்களும் பொது மக்களும் தொண்டர்களுக்கு மலர்மாலைகளைச் சூட்டினர். தொண்டர்கள் திரும்பி வந்த போது புதுத் தெரு பொது மக்கள் இந்தி ஏடுகளை எரித்தனர். பல தாய்மார்கள் தோழியர் அலமேலு அம்மையாரைக் கண்டு தங்களின் மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டனர்.

# யாருக்கு எதற்காக என் 144?

## அறப்போர் வீரர்கள் மீது அநாவசியத்தடை!

## 2வது போர்முனை குடந்தையில்!

★

கும்பகோணம் டிச. 15.

சென்னை சர்க்கார், கழகத்தின் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்து வரும் போக்கு நாளுக்கு நாள் வளர்ந்து, சில நாட்களுக்கு முன் குடந்தைத் தலைவர்களுக்கும் கழக நடவடிக்கைகளுக்கும் 144 போட்டிருப்பதை யொட்டி திராவிடர்கழக மத்திய நிர்வாகக் கமிட்டியின் அவசரக்கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்குக் குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் "பெரியார் இல்லத்தில்" நடைபெற்றது.

நிர்வாக உறுப்பினர்களில் பெரியாரவர்களும், தோழர்களான சி. என். அண்ணாதுரை, சேலம் ஜி. பி. சோமசுந்தரம், எம். வி. சொக்கலிங்கம், ஏ. சித்தையன், குடந்தை, பி. ஆர். பொன்னுசாமி, என். வி. நடராசன் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வாடிப்பட்டி சுப்பையா, அழகரிமுத்து, வேலூர்திருநாவுக்கரசு, விருத்தாச்சலம் சி. முனுசாமி, ஈ. வெ. கி. சம்பத், ஈரோடு சண்முகவேலாயுதம் ஆகியோரும், இன்றையக் கூட்டத்தில்சேர்த்துக் கொள்ளப்பட்ட தோழர்களான சி. டி. டி. அரசு, கே. ஏ. மணி அம்மையார் ஆகியோரும் வந்திருந்தனர்.

மற்றும் தோழர்களான விடுதலை ஆசிரியர் எஸ் குருசாமி, பராங்குசம், வி. சின்னத்தம்பி, எஸ். கே. சாமி, முத்துதனபால், ரங்கராசு, முத்துக்கிருஷ்ணன், நீடாமங்கலம் ஆறுமுகம், பேரளம் மகாதேவன், சி. கணேசன், ராமாமிர்தம், ரோசு அருணாசலம், சித்தக்காடு ராமையா ஆகிய பல முக்கியஸ்தர்களும் கூட்ட நடவடிக்கைகளில் கலந்து கொண்டனர். வெளியிடங்களிலிருந்து 1000-க்கு மேற்பட்ட தோழர்கள் உற்சாகத்தோடு வந்து, முடிவை அறிய ஆவலுடையவர்களாய் வெளியே கூடியிருந்தார்கள்.

இக் கூட்டத்திற்கு மத்திய கழகத் துணைத் தலைவர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை வகித்தார். நிர்வாக உறுப்பினர்கள் இது குறித்து 3-மணி நேரம் தீர்யோசித்து பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இந்த நிர்வாகசபைக் கூட்டமானது, தூத்துக்குடி மாகாண மாநாட்டின் தீர்மானப்படி அந்தந்த ஜில்லா கமிட்டியினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டு நடத்தப்படும் முதலாவது கூட்டமாகும். சில ஜில்லாக்களில் மாகாண கமிட்டிக்கு இதுவரை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பாதிருப்பதால் தலைவர் பெரியார் அவர்களின் 15-11-48 தேதிய அறிக்கைப்படி அந்த ஜில்லாக்களுக்கு இப்பொழுது இருந்து வரும் தேர்ந்தெடுத்த அங்கத்தினர்களையே அந்த ஜில்லாக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதென இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

2. நிர்வாகக் கமிட்டிக்கு நிர்வாகக் கமிட்டியால் சேர்த்துக் கொள்ளப்பட்ட அங்கத்தினர்களுடையவும், தலைவரால் நியமனம் பெற்றிருந்த அங்கத்தினர்களுடையவும் பதவி காலம் இக் கமிட்டி துவக்குவதோடு முடிவடைகிறது.

3. திராவிடர் கழகப் பிரசாரத்தைத் தடுப்பது என்ற அடக்குமுறைத் திட்டத்தின் பேரில், திருவாரூர், நன்னிலம், கோவில்பட்டி, திருக்கோயிலூர் முதலிய பல ஊர்களில் கழகப் பிரசாரத்துக்குத் தடைவிதித்தும், இயக்கப்பிரமுகர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதும் ஆகிய முறைகளில் (திராவிடர் கழகப்பிரசாரம், இந்தி எதிர்ப்புப் பிரசாரம் ஆகியவற்றைத் தடுக்கும் முறையில்) கும்பகோணத்தில், சர்க்கார் விதித்திருக்கும் 144-வது தடை உத்தரவு, திராவிடர் கழகத்தின் நியாயமான, அமைதியான பிரசாரத்தை அடக்குமுறையால் தடுத்து விடுவது என்று சர்க்கார் திட்டத்தின் ஒரு பகுதி என்று, இக் கமிட்டி தீர்மானிக்கிறது.

(அ) பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் திராவிடர் கழகத் தலைவரிடம் நேரில் கூறிய பிரசார உரிமையும், அவரது அறிக்கையில் குறிப்பிட்ட மாற்றுக்கட்சி பிரசார உரிமையும், இத்தகைய தடை உத்தரவுகளால் பறிக்கப்படுகிறது என்று இக்கமிட்டி கருதுகிறது.

(ஆ) திராவிடக் கழகத்தாரின் அமைதியான, நியாயமான பிரசார உரிமையைப் பறிக்கும் முறையில் சர்க்கார் தடை உத்தரவு விதித்தால், மீறுவது என்று திராவிடர் கழகம் 2-8-48ம் தேதியின் 6வது தீர்மானத்தின் 3வது பிரிவின் மூலம் தீர்மானித்திருக்கிறபடியால் அதற்கேற்ப கும்பகோணத்தில் சர்க்கார் 9-12-48ல் விதித்திருக்கும் 144வது பிரிவு தடை உத்தரவை எதிர்ப்பது என்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

---

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 52-ம் நாள் போர்.

சென்னை டிச. 13.

இன்று இந்து தியாலாஜிகல் பள்ளி முன் மறியல். இது தங்கசாலைத் தெருவில் மார்வாடிகள் பெரிதும் வசிக்கும் பகுதி என்பதையும் 1938-ல் இந்தி எதிர்ப்பு மறியல் இங்குதான் நடைபெற்றது என்பதையும் தோழர்கள் அறிவார்கள்.

தளபதி அண்ணா அவர்கள் தலைமையில் மறியல் கண்காணிப்பாளர்களான தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி மணிமொழியார் ஆகியவர்களின் மேற்பார்வையில், அய்ந்து அறப்போர் வீரர்களும் பெத்துநாயக்கன்பேட்டை காசி விசுவநாதர் கோயிலிலிருந்து புறப்பட்டு 10-மணிவரை மறியல் செய்தனர்.

பல காங்கரஸ் தோழர்களும், பார்ப்பனத்தோழர்களும், மார்வாடி சமூகத் தோழர்களும், வியாபாரிகளும் மறியலைக் காண வந்திருந்தனர்.

போக்கு வரவுக்கு இடையூறின்றிக் கண்காணிப்பவர்கள் பார்த்துக்கொண்டனர். போலீசாரும் மிக அதிகமாகவே வந்திருந்தனர்.

# குடி அரசு

18—12—48 சனிக்கிழமை.


## இரண்டாம் போர்முனை.

இந்த மாதம் 14-ம் நாள் திராவிடக் கழக மத்தியக் கமிட்டி அவசர அறிவிப்பின் மீது கும்பகோணத்தில் கூடியதையும், அக்கமிட்டி செய்த முடிவுகளையும் மற்றொரு புறத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

இந்தியை எதிர்த்துச் சிறிதும் ஆரவார ஆர்ப்பாட்டமில்லாமல் மிக, மிக அமைதியாக நடத்தப்பட்டுவரும் அறப்போரானது 2—8—48-ம் நாள் சென்னையில் கூடிய நிர்வாகக் கமிட்டியின் முடிவுப்படியாகும். இந்தக் கூட்டத்திற்கு முதல் நாள், தந்தை பெரியாரவர்களை வரவழைத்து மாகாணப் பிரதமர் அவர்கள் பேசிய பிறகு, சர்க்காரின் சார்பாகப் பிரதமர் ஒரு அறிக்கையும் வெளியிட்டார். அந்த அறிக்கையில் இந்தியை எதிர்த்து அமைதியான முறையில் நடத்தப்படும் எந்த வகையான நிகழ்ச்சியையும் சர்க்கார் தடைப்படுத்தமாட்டாதென்பதாகவும், அப்படி எதிர்த்துப் பேசுவது, மறியல் செய்வது முதலிய எல்லாம் மனித வுரிமை என்பதாகவும், அந்த மனிதவுரிமையைச் சர்க்கார் பறித்துக் கொள்ளமாட்டாதென்பதாகவும் வற்புறுத்தியிருக்கிறார். இந்த அறிக்கை பிரதமரின் சொந்த முறையில் கொடுக்கப்பட்டதல்ல என்பதையும் மற்ற மந்திரிகளும் மேலதிகாரிகளும் கூடிக் கலந்து சர்க்காரின் சார்பாகக் கொடுக்கப்பட்ட அறிக்கையே என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

2—8—48-நாள் கூட்டத்திலேயே பள்ளிகளில் மறியல் செய்வதும், படை, ஊர்வலம், பொதுக் கூட்டம் நடத்துதலும், மந்திரிகளைப் பகிஷ்காரம் செய்தலும் இன்றையப் போர்த் திட்டங்கள் என்று கூறி, இச் செய்கைகள் நடைபெற வொட்டாமல் சர்க்கார் தடை நடவடிக்கைகளிலிறங்குமானால் அவைகளை அர்த்தமற்றதாகக் கொண்டு வெற்றி காணும் வரை மீறி, மீறி அச் செயல்களைச் செய்யவேண்டும் என்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதையொட்டி 10—8—48-ம் நாள் முதல் அமைதி தவழ அன்பு கனியச் சென்னையில் மறியல் நடைபெற்று வருவதும், சென்னையிலும் மற்ற இடங்களிலும் இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், அடையாள மறியல்கள் நடைபெற்று வருவதும், மந்திரிகள் பகிஷ்கரிக்கப்பட்டு வருவதும், எந்தவிதமான பலாத்காரத்துக்கோ கலகத்திற்கோ, குழப்பத்திற்கோ இடமில்லாத வகையில் தான் நடந்துகொண்டு வருகின்றன என்பதை மக்களும் அறிவார்கள். சர்க்காரும் உணர்வார்கள்.

கழகத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் எதுவுமே மறைமுகமாக இன்று வரை நடத்தப்படவில்லை. ஒவ்வொன்றும் சர்க்கார் அறிந்து, சிந்தித்து முடிவு கட்டவேண்டியதற்கான தவணைகொடுத்தே செய்யப்பட்டு வந்திருக்கிறது. போலீஸ் சி. அய். டி. இல்லாதபடி அல்லது அவர்களுக்குத் தெரியாமல் கழகத்தின் நடவடிக்கைகள் இருக்கவேண்டுமென்பது கழகத்தின் நோக்கமல்ல என்று கூடச் சொல்லலாம். இன்றைய மந்திரிகள் எல்லோருமே இந்த உண்மையைத் தெரிந்தவர்கள் தான். நமது நடவடிக்கையை—எதிர்ப்பு முறைகளை, மற்ற காங்கரஸ் திராவிடர்களும், சோஷியலிஸ்ட் திராவிடர்களும், கம்யூனிஸ்ட் தோழர்களும் நேரிலேயே வந்து காணுகிறார்கள், அவர்களில் சிலர் மனம் விட்டுப் பாராட்டுகிறார்கள், ஒரு சிலர் நாங்களும் இச்செயலில் உங்களுக்கு உதவிபுரிகிறோம் எனக்கூறி முன்வருகின்றனர்.

இதை நாம் ஏன் கூறுகிறோமென்றால், திராவிட இயக்கம் ஒரு பலாத்கார இயக்கமல்ல, பலாத்காரத்தில் நம்பிக்கையுடைய இயக்கமுமல்ல. அதை எப்போது எங்கெங்கு சோதித்துப் பார்த்தாலும் பலாத்காரத்திற்கான, கலவரத்திற்கான சிறு தடயமும் அகப்படவில்லை, இருந்தாலல்லவா அகப்பட முடியும் என்று சர்க்காரே கூறவேண்டியதாயிருக்கும்படியான ஒரு இயக்கமாகும். அறப்போரில் கழகம் ஈடுபட்ட பிறகு எந்த இடத்திலும் நடந்த எந்தச் சம்பவத்தையும் பொது மக்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியதென்று சர்க்கார் நடுநிலைமையில் நின்று கூறிவிடமுடியாது. அப்படியிருந்தும் சர்க்காரின் குட்டி நீதி தேவதைகள் அங்கங்கே நடந்து வரும் அமைதியான பிரச்சாரங்களுக்குத் தடைவிதிக்கின்றார்கள், இயக்கத் தோழர்களுக்கு வீண் தொந்தரவு கொடுப்பதற்காக இல்லாத பழியைச் சுமத்தி இழுத்தடிக்கிறார்கள், இயக்கப் பிரமுகர்கள் மீது இல்லாத குற்றஞ் சாட்டி ஜாமீன் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் இது அதிகார வெறியில் அற்பர்களின் தூண்டுதலால் செய்யப்படுகிற காரியங்கள் என்பது ஒரு புறமிருந்தாலும் சர்க்காரின் கருத்தை—வாக்குறுதியைச் சிதைத்துக் காற்றில் பறக்கவிடவேண்டுமென்கிற தான்தோன்றித் தனமான நடத்தையாகாதா?

உதாரணத்திற்குத் திருவண்ணாமலையை எடுத்துக் கொள்ளலாம். அங்கே இப்போது வழக்குநடந்து முடிந்துவிட்டது. அதாவது சர்க்கார் அதிகாரிகள் வழக்கை வாப்பீஸ் பெற்றுக் கொண்டுவிட்டார்கள். இந்த வழக்கு திருவண்ணாமலையில் டிப்டிசூப்பிரண்டெண்டாக இருந்த தோழர் பசுபதி அய்யர் என்பவரால் திராவிடக் கழகப் பிரமுகர்கள் மீது ஜோடிக்கப் பெற்றுச் சென்ற 9-மாத காலமாக நடந்து வந்ததாகும். இந்த ஜோடிப்பு வேலையில் உள்ளூர் தேசியத் தோழர்கள் எந்த அளவு பங்கெடுத்துக்கொண்டார்களோ? இப்போது அந்த ஜில்லா கலெக்டரே வழக்கைத் திருப்பிவாங்கிக்கொள்ளச்சொல்லி உத்தரவு போட்டிருக்கிறார். ஏன்? குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் கலெக்டருக்கு அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்ல, மந்திரி

களுக்குச் சொந்தக்காரர்களல்ல, மந்திரி கட்சியைச் சேர்ந்தவர்களு மல்ல என்று சொல்லவேண்டிய நிலையில் உள்ளவர்கள். இந்த வழக்கினால் 9-மாதம் தொந்தரவு கொடுத்து சம்பந்தப்பட்ட தோழர்களுக்கு வீண் அலைச்சலையும், மனக்கவலையையும் கொடுத்து வந்து, இப்போது வழக்கை வாப்பீஸ் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சர்க்கார் உண்மையைத்தெரிந்துகொண்டார்கள் என்று அர்த்தமா? அக்கிரம நடத்தைக்கு அதிகாரம் பயன்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு கொண்டார்களா? அப்படியானால் அந்தப் பசுபதி அய்யர் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்ன? அவருக்கு ஒத்துழைத்த கையாட்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

இந்த வழக்கை வாபீஸ் வாங்கிக்கொண்டதிலிருந்து, திராவிட இயக்கத் தோழர்கள்மீது அபாண்டமாக, இல்லாத குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறதென்பதையும், இப்படிக் குற்றஞ்சாட்டப்படுவதற்கு அடிப்படை உண்மை என்ன என்பதையும் சர்க்கார் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.

திருவாரூரிலும் கோயில்பட்டியிலும் இயக்கப்பிரமுகர்கள் மீது ஜாமீன் நடவடிக்கை. இவைகள் நீதிக்கு மதிப்புக் கொடுத்து நல்ல முறையில் விசாரணைக்கு வரும் போது இவற்றினுடைய உண்மை நடப்பும், கழகத் தோழர்களின் கண்ணியமும் நீதி மன்றங்களில் நிலைநாட்டப்படும்.

கடலூர், நன்னிலம், குடவாசல் போன்ற இடங்களில் 144. இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களுக்குத்தடை. இந்தி எதிர்ப்புக்கூட்டங்களுக்குத் தடை. இப்போது 9-12-48ம் நாள் கும்பகோணத்திலும் அவைகளுக்குத் தடை.

இப்படித் தடை விதித்து அமைதியான முறையில் நடந்துவரும் சாதாரணப்பேச்சுரிமையைக்கூடப் பறிக்கப்பட்டு வருகிற அக்கிரமத்தைக் கழகம் சர்க்காருக்குப் பல முறை எடுத்துக்காட்டி வந்திருக்கிறது. 4-9-48ல் திருச்சியில் கூடிய நிர்வாககமிட்டியும் இதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கழகத் தோழர்கள்மீது எங்கெங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதோ, கழக நடவடிக்கைகளுக்கு எங்கெங்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் பார்ப்பனீய வெறிபிடித்த அதிகாரிகளும் பார்ப்பனீயமோகம் கொண்ட தேசியத் தோழர்களுமே அவற்றிற்குக் காரணமாக நின்று, பொருந்தாத முறையில் தடை விதித்து வருகிறார்கள் என்கிற உண்மையைச் சர்க்கார் அறிந்து கொண்டிருக்கவேண்டும். அல்லது வெகு சீக்கிரமே அறிந்து கொள்ள வேண்டும்.

இப்படி அக்கிரமமான முறையில், மந்திரிகள் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாகத் தடை விதித்து, கழகத்தின் சாதாரண நடவடிக்கைகளைக்கூட நடத்தவொட்டாதபடி செய்யப்படும் சின்ன அதிகாரிகளின் போக்கை எடுத்துக் காட்டிய பிறகும் கூட, சர்க்கார் அதற்குப் பரிகாரம் செய்ய முன்வரவில்லை என்றால், அதிகாரக் குறும்பை அறுத்து விடத் துணியவில்லையென்றால், இந்த ஆணவப் போக்கிற்குக் கழகம் பலியாக வேண்டியதுதானா? இதைத்தான் கழகத்தை ஒழிப்பதற்குக் குறுக்கு வழி எனச் சர்க்கார் கருதியிருக்கிறதா? இதைக் கழகம் உணர்ந்து கொண்டபிறகு கடைசிப்பட்சமாகத் தற்காப்பு வேலையிலாவது இறங்க வேண்டாமா? 50000 மக்கள் கொண்ட ஈரோட்டு மாநாடு இத்தடையுத்தரவுகளைத் தகர்த்தெறிய வேண்டும் என்று தீர்மானித்த பிறகும்கூட, வேண்டுமென்றே தடைவிதிக்கும் வீண் போக்கு வளர்ந்து கொண்டு வருவதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமா? அநாவசியமான இந்த அடக்கம் அழிவுப்பாதைக்கல்லவா அழைத்துச் செல்லும்? என்கிற வேதனைகளுக்கும், குமுறலுக்கும், கேள்விகளுக்கும் குடந்தையில் கூடிய நிர்வாகக் கூட்டம் பதில் கூறிவிட்டது.

ஆம்! தடையை மீறு! என்பதே அந்தப் பதில். ஆனால் அமைதியாக, பொதுமக்களுக்கு எந்தவித இடையூறுமின்றி.

நிர்வாகக் கமிட்டி இப்படி முடிவு செய்வதைத் தவிர வேறு வழியில்லை. தடையை மீற வேண்டும் என்கிற இந்த முடிவை, இதற்காக ஒரு நிர்வாகக் கமிட்டி கூடிச் செய்திருக்கும் முடிவிலிருந்தே, கழகத்தின் கட்டுப்பாட்டையும், கழகம் சமாதான முறையிலேயே போராட்டத்தை நடத்த வேண்டும் என்று துணிந்திருக்கிறது என்கிற போக்கையும் சர்க்காருக்குக் கண்ணாடி போல் காட்டிவிடும்.

ஏன்? அமைதியான நம் எதிர்ப்புப் பிரசாரத்திற்குத் தடை விதிக்கப்பட்டால் அதை மீறவேண்டுமென்கிறமுடிவு போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னாலேயே செய்யப்பட்ட முடிவாகும். மறப்போருக்காக அறப்போர் நிறுத்தி வைத்திருந்து மீண்டும் அறப்போர் தொடங்குவதற்கு முன் 23—10—48-ல் ஈரோட்டில் கூடிய தனி மாநாடும் 7-வது தீர்மானமாகச் செய்திருக்கும் முடிவாகும். அப்படி மாநாடு செய்த ஒரு முடிவைக் கைக்கொள்ள வேண்டிய நேரத்தில் கூட ஒரு நிர்வாகக் கமிட்டியைக் கூட்டிமீண்டும் முடிவு செய்திருக்கிறது என்றால் இது எதைக் காட்டுகின்றதென்று கேட்கிறோம்?

இந்தச் சம்பவத்தில் தடையை மீறுவதைக்கூட, எதிர்ப்புக் கருத்தைத் தட்டிகளில் எழுதி அவற்றைத் தூக்கிக் கொண்டு அமைதியாக எதிர்ப்பொலி முழக்கி குடந்தைத் தெருக்களில் ஊர்வலம் வருகிறது'' என்றுதான் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவைச் சீர்தூக்கிப் பார்க்கும் சர்க்கார் எந்த முடிவுக்கு வந்தாலும் கவலையில்லை. ஆனால் கழகத்திற்குச் சமாதான முறையிலேயே நம்பிக்கையுண்டு என்பதை மட்டும் தெரிந்துகொள்ளட்டும். மேலும் அதிகப்பிரசங்கிகளான குட்டித் தேவதைகள் தான் இந்த இரண்டாம் போர் முனைக்குக் காரணமானவர்கள் என்பதையும் அறிந்து கொள்ளட்டும்.

இயக்கத் தோழர்கள் எதிர்பாராத முறையில் கிடைத்திருக்கும் இந்த இரண்டாவது போர்முனை,

## நீலமேகத்திற்கு

### முதல் பிரைஸ்!

திராவிடர் கழக உபதலைவர் குடந்தை தோழர் கே.கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் **19-12-48** தேதியன்று குடந்தையில் **144** உத்திரவை மீறி ஊர்வலம் நடைபெறும்.

ரோஜா முத்தையா

# பதுமையின் பிதற்றல்!

★

அயோத்தி ராமனை; கனவில் நினைத்து தென் இலங்கை வேந்தன் இராவணன் அலறித்துடிப்பானென்று இதிகாசம் கூறுகிறது. இதை உண்மை என்று என்னால் நம்பமுடியாது. ஏனெனில் அந்த அளவுக்கு இராமனிடம் உயர்ந்த பண்போ வீரமோ, ஒன்றும் இருந்ததாக அதே இதிகாசத்தில் கூடக்கிடையாது. அவ்விதம் இருக்கையில் வீரத்தால், குணத்தால் வல்லவனான இராவணன் அலறித்துடித்தானென்று கூறுவது, கட்டுக்கதை. வஞ்சனையின்சூழ்ச்சி. ஆனால்! அதே இராவணனின் பரம்பரையான ஈரோட்டு பெரியார் ராமசாமியைக் கண்டு, அயோத்திராமனின் பரம்பரையான (பார்ப்பனர்கள்) அக்கிரகாரவாசிகள், கனவிலும், நினைவிலும் அலறித்துடிதுடிப்பதை இன்று நேரில் கண்டு வருகிறோம். ஏனெனில் அவர்களின் சோம்பேறி உல்லாச வாழ்விற்கு கொலைக் களம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால், இது இயல்பு. ஆச்சரியமில்லை. ஆனால்! அதே பெரியாரின் பரம்பரையினரே பெரியாரைக்கண்டுஅலறினால் அப் பேர்வழிகளைக் கண்டு ஆச்சரியப்படுவீர்களா? என்னைப் பொருத்தவரையில் ஆச்சரியப்படத்தேவையில்லை என்றே கூறுவேன். ஏனெனில் சுயநலத்தை எவன் எவன் கருதிவிட்டானோ, அவனெல்லாம், சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல அடங்குவதும், ஒடுங்குவதும், அலறுவதும் மனித இயல்பாகப் போய்விட்டது. இப்பேர்ப்பட்ட பேர்வழியைத்தான் உங்களிடம் படம் பிடித்துக் காட்டப்போகிறேன்.

அன்று "தினமணி" சொக்கலிங்கம், இன்று "தினசரி" சொக்கலிங்கம் "தாண்டவம்" என்ற வார இதழ் ரூபத்தில் வந்து, பெரியாரை நினைத்து நினைத்து, அலறுகிறார், ஒடுகிறார், துடிதுடியாய்த் துடிக்கிறார், மோதுகிறார். கன்னாப்பின்னா என்று வாயில் வந்தபடியெல்லாம் உளறிக்கொட்டுகிறார், பேனா சென்றபடியெல்லாம் எழுதிக் கிறுக்கித் தள்ளுகிறார். கோவணத்தைக் கிழித்துத் தோளில் போட்டுச் செல்லும் பைத்தியக்காரனைப்போல.

பொது மேடையில் நின்று பேசுபவன் பேச்சாளி, எழுதுபவனெல்லாம் எழுத்தாளி, பத்திரிகை நடத்துபவனெல்லாம் பத்திரிகை ஆசிரியன், என்று நினைக்கும் அளவுக்கு மக்களின் மனப்பண்பு இருக்கிறவரையில், "தாண்டவம்" போன்ற ஒட்டை எழுத்துக்காரனெல்லாம் நாட்டில் தலை நிமிர்ந்து நடக்கலாம். ஆனால் அந்த வாழ்வு நிரந்தரப் பலனளிக்காது என்பதை மட்டும் மனதில் பதியவைத்துக்கொள்ளவேண்டும்.

வாயில் இருந்துவரும் வார்த்தைகளுக்கு ஒரு அளவு இருக்கவேண்டும், எழுதும் எழுத்துக்களில், நல்லஉயிர்ப்பு மிளிரவேண்டும், பத்திரிகை நடத்தினால் அதற்குரிய பத்திரிகா தர்மம் இருக்கவேண்டும். அவையில்லையேல், அவைகளைச் செத்த பிணத்திற்கே ஒப்பிடவேண்டும்.

அதுபோலவேதான் "தாண்டவம்" என்ற வார ஏடு, தனக்கே புரியாத எதை எதையெல்லாமோ எழுதுகிறது, பெரியாரை வலுவில் அடிக்கடி இழுத்துப் பேசுகிறது, சம்பந்தமில்லாத வேளைகளிலெல்லாம். சரி! எழுதுவதுதான் எழுதுகிறதே, அதற்கும் ஓர் காரணம் வேண்டாமா? அதுதான் இல்லை. படியுங்கள்.

சர்ச்சில் தன்னுடைய பிறந்த தின விழாவைக் கொண்டாடினாராம், அதற்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் போய்க் குவிந்தனவாம். இதில் முதல் வாழ்த்துச் செய்தி, பெரியார் ராமசாமி அவர்களினுடையதாக இருக்குமென்று "பதுமை" கூறியதாம். இதைக் கண்டு வாயை இளிக்கிறது தாண்டவம்"

பார்த்தீர்களா! "தாண்டவம்" தாங்கி வரும் வார்த்தைகளை. மனிதனுக்கு உரிய உயர்ந்த குணங்களில் ஒன்றாவது இருக்கிறதா? இக்காண்டவத்திற்கு. பரத்தையின் வயிற்றில் பெண்கள் பிறந்தாலும் பத்தினிப் பெண் உண்டு. ஆனால் இந்தப் பதுமையார் யார் வயிற்றில் பிறந்து, இவ்விதம் சீரழிக்கிறதோ தெரியவில்லை. பதுமைதானே, அதற்கு ஏதப்பா! தாய் தந்தையர்கள் என்று கூறிவிடாதீர்கள். பதுமையின் திரை மறைவில் கண்டிப்பாக யாராவது இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் பதுமை கதை சொல்லுமா?

ஏ! மாமிசப் பிண்டமே, மடாதிபதிகளும், ரமண ரிஷிகளும், சோற்றுத் துருத்திகளும், அவர்கள் தம் பாதந் தாங்கிகளும், தங்கள் பிறந்த தின விழாவைக் கொண்டாடுவதும், ஒட்டை எழுத்துக்காரனாகிய நீ பத்திரிக்கையில் அதைப் பிரமாதமாகப் பிரசுரிக்கவும் செய்யும் போது, சர்ச்சில் தனது பிறந்த தின விழாவைக் கொண்டாடினால் என்ன? அதற்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பினால்தான் என்ன? சர்ச்சில் அதற்கு அருகதை உடையவரில்லையா? நீ போற்றிப் புகழும் தலைவர்களில் எவரைவிட சர்ச்சில் இளைத்தவர், சொல் பார்க்கலாம்! அட வெண்ணை வெட்டி வீரனே! உலகப் போரின் காரணமாகஒவ்வொரு நாட்டின் தலைவர்களும் திணறிக் கொண்டிருந்த நாளில், தீரத்தோடு உலாவிய வீரபுருஷனல்லவா! லண்டன் ஒழிந்து விடும் என எண்ணி உனது கூட்டம் மாற்றானுக்கு வாசலைக்காட்டிக்கொண்டிருந்த நேரத்தில், எதற்கும் அஞ்சாது உலாவிய ஏந்தல் அல்லவா! ராசதந்திரி அல்லவா! தன் இன மக்களின் உரிமையை நிலைநாட்டிய பெரும் பேறு படைத்த வீரனல்லவா சர்ச்சில். அவன் லண்டனுக்கு வாங்கிக்கொடுத்த விடுதலையல்லவா, வாழைப்பழத்தில் ஊசியை இறக்கி, வீரத்தை மெச்சிக் கொண்டிருந்த உனக்கு விடுதலை அளித்தது. அவ்வளவு வல்லமை பொருந்திய சர்ச்சிலுக்கு அந்நாட்டு மக்கள் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் என்ன வியப்பு. நீ வாழ்த்துச் செய்தி அனுப்பினால் தான் என்ன கேடு. நீ என்றவுடன் உன்னைச் சொல்லிவிட்டதாக எண்ணி உள்ளப்பூரிப்படைந்து விடாதே! உன் வாழ்த்துச் செய்தியை நானே மதிக்காது இருக்கும் போது சர்ச்சில் உன்னை எதிர்பார்க்கவா போகிறார்! சர்ச்சிலா, தெரியாமல் சொல்லிவிட்டேன். சர்ச்சில் வீட்டின் நகரசுத்தித் தொழிலாளிகூட உன்னை எதிர்பார்க்கமாட்டான். காரணம் உன்னிடத்தில் ஊதாரித்தனம் இருப்பதால். எனவே அவைகளை மறந்து, வீரனை வீரன் போற்றவேண்டும் என்ற மனிதப் பண்பை மறந்துவிடாதே. மடத்தனமாக உளறாதே. பொருளில்லாக் கதைகளையும், பொருந்தா உவமானங்களையும் அளக்காதே! இவ்விதம் உன் தலையிலேயே குப்பையை வாரிப் போட்டுக்கொள்வது உனக்கே வெட்கமாகத் தோன்றவில்லையா? அல்லது

---

இன்னும் இரண்டு மூன்று நாளிலேயே திறந்து விடப்படலாம் என்று நினைக்கிறோம். அதுவும் தடைவிதிக்கப்பட்ட தோழரும் மத்திய திராவிடக் கழகத் துணைத் தலைவருமான தோழர் கே. கே. நீலமேகம் அவர்களே இதை முன்னின்று நடத்துவார்கள் எனவும் அறிகிறோம்.

அப்படித் தொடங்கப்படுமானால் அதிகாரிகளின் குறும்பை உடனே அகற்றிவிடக்கூடிய சக்தி சர்க்காருக்கு இல்லை என்பதுதான் அதற்குப் பொருளாகும். இப்போது சர்க்கார் என்ன செய்யப் போகின்றார்கள்?

# தென்னாட்டார் சிந்தனைக்கு

"ஜப்பல்பூர் அழகன்"

★

வடநாட்டில் அன்னியநாட்டு நயம் அரிசி ரூபாய்க்கு $2\frac{3}{4}$ படி கிடைப்பதும், சாதாரண அரிசி ரூபாய்க்கு $4\frac{1}{4}$ படி கிடைப்பதும், தென்னாட்டில் ஒரு படி அரிசி ரூ. 1-12-0 ஆக இருப்பதும் ஏன்? வடநாட்டில் ஆகஸ்டு மாதத்தில் ரூபாய்க்கு $1\frac{1}{2}$ படி அரிசியாய் விற்றது டிசம்பர் மாதத்தில் $2\frac{3}{4}$ படியாக ஆனதும், ஆனால் ரேசன் கண்ட்ரோலை எடுத்திருந்த சென்னையில் திரும்பவும் ரேசன் கண்ட்ரோலை உண்டாக்கியதும் ஏன்? வடநாட்டில் அரிசியும் மற்றும் தானிய வகைகளும் எவ்வளவு வேண்டுமோ (அதாவது ஒருவன் 1000 மூட்டை தானியங்கள் வேண்டுமோனாலும் வாங்கலாம்) அவ்வளவு ஏராளமாய் வாங்கக் கிடைப்பதுவும், தென்னாட்டில் 8 அவுன்ஸ் ரேசனுக்குக்கூட அவதிப் படுவதும் ஏன்?

வடநாட்டுப் பனியாக்கள் தென்னாட்டில் மெத்தைமேல் தூங்குவதும் தென்னாட்டு மக்கள் அனாதைகளாக வடநாட்டு நடை பாதைகளில் படுத்துறங்குவதும் ஏன்? வடநாட்டான், தென்னாட்டில் முதலாளியாகவும், பணக்காரனாகவும், கொள்ளை லாபம் அடிக்கும் கடைக்காரனாகவும், தம் படிக்கு தம்படி வட்டி வாங்கும் வட்டிக்கடைக்காரனாகவும், எஜமானாகவும் இருக்கும்போது, தென்னாட்டுப் பெண்கள்கூட வடநாட்டில் விறகு வெட்டி விற்றும், புல் அறுத்து விற்றும், வடநாட்டான் வீட்டில் அடிமையாய் இருந்தும், தெருக்கூட்டியும், பிச்சை எடுத்தும், இன்னும் பல இழிவான கஷ்டமான தொழில்கள்செய்து பிழைப்பதும் ஏன்? வடநாட்டான் ஒருவன்கூட தென்னாட்டில் பிச்சை எடுக்காதது ஏன்? வடநாட்டான் தென்னாட்டில் 2-ம் தர (நடுத்தர)மான வேலை கூடச் செய்யாததும், தென்னாட்டான் வடநாட்டில் 3-ம் தர (கஷ்டமான் கேவலமான) வேலை செய்வதும் ஏன்? வடநாட்டில் தென்னாட்டவரை, தாழ்ந்த ஜாதியாகவும், கேவலமாகவும் எண்ணுவதும், தென்னாட்டில் வடநாட்டானை உயர்ந்தவனாக எண்ணுவதும்ஏன்? வடநாட்டில் தென்னாட்டுப்பெண்கள் கூட அடிமை வேலை செய்வதும், தென்னாட்டில் வடநாட்டான் முதலாளியாய் இருப்பதும் ஏன்? வடநாட்டில் ஆங்கிலம் பேசத் தெரியாத வடநாட்டான் கூட ஆபீஸராய் இருப்பதும், தென்னாட்டில் ஆங்கிலம் தெரியாதவனுக்கு ஆபீஸ் வாசல் காக்கும் பியூன் உத்தியோகம் கூடக் கிடைக்காததும் ஏன்? வடநாட்டான் தென்னாட்டாரை கருப்பு நிறத்தான் என்று சொல்லுவதும், தென்னாட்டு ஆரியப் பத்திரிக்கைகள் நம்மவர் படங்களைக் கருப்பான நிறத்தில் வரைவதையும் கவனிக்காதது ஏன்? வடநாட்டான் தன் பெண்களை முக்காடு போட்டு வைத்திருப்பதும், சோஷியலிஸத்தை ஆதரிப்பதாக நடிக்கும் பாரததேவி கூட பெண்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை யிடுவதையும் உணராதது ஏன்? தென்னாட்டாரில் பலர் ஜெய் ஹிந்த் என்று கூறியும், வடநாட்டான் வாயில் இந்த வார்த்தை வராதது ஏன்? வடநாட்டு இந்து தனது முதல் சந்திப்பில், தன் சிநேகிதனுக்கோ அல்லது மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பதற்காகவோ, ஜெயராம்ஜீக்கு என்று சொல்லுவதும், இவர்களும் இந்துக்கள் தான் என்று கூறப்படும் சீக்குகள், செஸ்ரீக்கால் என்றும் சொல்லுவது ஏன்? வடநாட்டில் பிராமணன் கூட மாமிசம் சாப்பிடுவதும், அதே வம்சத்தில் உதித்தவனான தென்னாட்டுப் பிராமணன் மீன்கூடச் சாப்பிடாததும் ஏன்?

இந்தியாவில் உள்ள முஸ்லிம்களை 5-ம்படை என்றும், அயோக்கியர்கள் என்றும், பாக்கிஸ்தான்வேண்டும்என்று கேட்டவர்கள் தானே ஆகையால் பாக்கிஸ்தானுக்குப் போகட்டும் என்றும் சொல்லும் காங்கரஸ் கனவான்கள் (தொந்தி பெருத்தவர்கள்) காஸ்மீரில் 100க்கு 80 பேர்கள் முஸ்லிம்களாக இருந்தும் அவர்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லி, தினமும் நூற்றுக்கணக்கான இந்தியப்போர் வீரர்களை காஸ்மீரில் பலிகொடுப்பதும் ஏன்? தன் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள வீட்டில் வாழும் முஸ்லிம் 5ம் படையைச்சேர்ந்தவனாகவும், பல ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள காஸ்மீர் முஸ்லிம் தன் படையைச் சேர்ந்தவனாக எண்ணப்படுவதும் ஏன்? கிழ்பாஞ்சாலத்தில் (இந்தியா) ஒரு முஸ்லிம்கூட விடப்படாமல் இந்துக்களாலும், சிக்குகளாலும், சங்கரிக்கப்பட்டும், மேல் பாஞ்சாலத்தில் (பாகிஸ்தான்) பல லட்சம் இந்துக்களும், சிக்குகளும் ஆனந்தமாய் இருப்பதாகக் கடிதம் எழுதத்தக்கதாய் முஸ்லிம்கள் இன்னும் விட்டு வைத்திருப்பதும் ஏன்?

வடநாட்டான் வஞ்சகன் என்றும், சிரித்துக்கொண்டே கழுத்தை அறுக்கும், துரோகி என்றும் உணராதது ஏன்?

முன்வைத்தகாலை பின்வாங்காதவர்கள் வம்சத்தில் உதித்தவர்தான் நாம். ஆனால், நம்மை இழிவு படுத்துவதும், நம் கலாச்சாரத்தைக் கொலை செய்வதும், நம் தாய் மொழியைத் தவிக்க விடுவதும் அன்னியனுக்கு (வடநாட்டானுக்கு) அடிமையாவதும், நம்மைக் கொள்ளை கொள்ள விட்டுக்கொடுப்பதுமான கொள்கையில் இருந்து நாம் பின் வாங்காவிட்டால், நம் நிலைமையும், நம் பின் சந்ததியின் நிலைமையும் என்னவாகும் என்பதைச் சிந்திப்பதற்காகவே இதை எழுதியுள்ளேன். படித்துவிட்டீர்களா? இனி சற்று உட்கார்ந்து சிந்தியுங்கள்!

---

உனது எழுத்துக்களையும் கண்டு, உள்ளப்பூரிப்படைகிறாயோ! ஓட்டை எழுத்துக்காரனப்பா நீ. உன்னை அறியாமலேயே எழுத்துக்கள் ஒழுகிக் கிடக்கின்றன. எனவே எழுதிக் கம்பாசிட்டரிடம் கொடுப்பதற்குமுன் மறுபடியும் வாசித்துக் கொஞ்சம் சிந்தித்துப்பார், அப்பொழுது உண்மை விளங்கும். உண்மையை உனது உள்ளம் உணர்ந்தாலும், வெளிக்குக்காட்டவா போகிறாய். நீதான் அம்மாமி வர்க்கத்திற்கு அஞ்சிக்கிடக்கிறாயே! சரி உனது இஷ்டம். படுவதை பட்டுத் தானே தீரவேண்டும்.

"வாலி"

---

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 53-ம் நாள் போர்.

சென்னை டிச. 14.

நேற்றுப் போலவே இன்றும் இந்து தியாலாஜிகல் பள்ளியின் முன்பு 10-45-வரை அய்ந்து தொண்டர்களின் அமைதியான மறியல் நடைபெற்றது.

மறியல் நடந்துகொண்டிருக்கும் போது, மற்றொருபுறம் கள்ளிறக்கும் தொழிலாளர்கள் சிலர் மிகப் பரிதாபகரமான முறையில் அவ்வழியில் சென்றனர்.

போலீஸார் அதிகமாக வந்திருந்து கண்காணித்தனர் என்றாலும் மக்களின் ஆர்வம் மிஞ்சியிருந்ததால் கெடுபிடியைக் குறைத்துக் கொண்டனர்.

## 54-ம்நாள் போர்.

சென்னை டிச 15-

இன்றும் இந்து தியாலாஜிகல் பள்ளி முன்பு 9-மணி முதல் 1-மணி நேரம் வரை அய்ந்து தொண்டர்களின் மறியல் அமைதியாக நடைபெற்றது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

லாங் காரணம், அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட இலக்கியங்களும் அவற்றைக் கற்பித்த ஆசிரியர்களுமேயாவர். இக்கருத்தை நம் கவிஞர் அழகாக எடுத்துத் தீட்டியுள்ளார்.

"நற்றமிழில், தமிழகத்தில்
நல்லெண்ணம் இல்லாத
நரிக்கூட்டத்தை
கற்றுவைக்க அமைப்பதினும்
கடிநாயை அமைத்திடலாம்
அருமையாகப்
பெற்றெடுத்த மக்கள்தமைப்
பெரும்பகைவர் பார்ப்பனர்பால்
அனுப்போம் என்று
சொற்றவர்க்குக் கூறிடவும்
அவர் ஒப்புக்கொண்டிடவும்
செய்தல் வேண்டும்"

இதைவிட வேறு என்ன சான்று வேண்டும். நம்மவர்க்கு எழுச்சி வேண்டும். பார்ப்பான் பாடசாலைக் கணக்காயனாக இருப்பதால் தமிழை இகழ்கின்றான். ஆரியத்தைப்புகழ்கின்றான்—போற்றுகின்றான். இளைஞர்களைக்கெடுக்கின்றான். அன்னவனை இன்னமும் யாம் கல்வித் துறையில் விட்டு வைத்தல் அடாது.

எந்த ஒரு பார்ப்பனனாவது இது வடசொல், இது தமிழ்ச்சொல் என்று பிரித்துக் காட்டிக் கற்பிப்பதைக்காண முடியுமா? மெல்ல, மெல்ல கல்வி நிலையத்திலிருந்து அவர்களை விரட்டினாலொழிய நாமும் நம் நாடும் ஈடேறமாட்டோம்.

நம்முடைய குறிக்கோள், எண்ணம் [திராவிடநாடு திராவிடருக்கே] நிறைவேற வேண்டுமேயானால் நம்முடைய குழந்தைகளுக்காவது அந்த எண்ணத்தை ஊட்டியாகவேண்டும். ஆனால் அவற்றிற்கு நேர்மாறான எண்ணங்களைச் சிறுபருவத்தில் பதிய விடுதல் (கற்பிக்க விடுதல்) ஆகாது. எனவே கதைகளைப் புனைந்து கொடுக்கிறார்களே அவர்களிடத்தில் நாம் மிக்க கவனஞ் செலுத்தவேண்டும்.

இந்த எண்ணத்தோடு இப்பொழுது நம் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படும் இலக்கியங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் பெருத்த ஏமாற்ற மட்டுமல்ல வெட்கமும் அடைவோம்.

பெரியபுராணக்கதை.
கந்தபுராணக்கதை.
திருவிளையாடற் புராணக்கதை.
பாரதக்கதை.
இராமாயணக்கதை.

ஏனைய இந்திரன் சந்திரன் கதைகள் எல்லாம் சிறுவர்களுக்கு இருபதாம்நூற்றாண்டாகிய விஞ்ஞான காலத்தில் திராவிட நாட்டில் கற்பிக்கப்பட்டு வருகிறது என்றால் இதைவிடமானங்கெட்ட தன்மைவேறென்ன

## வேண்டுகோள்.

"தொல்காப்பியம் — திருக்குறள்— சங்க இலக்கியங்கள் இவை அறிவிக்கும் தமிழர் பண்பாடு—வரலாறு" முதலியவற்றைப்பற்றித் தமிழ்ப்பொதுமக்களிடையே பரப்பும் பொருட்டு, இராமநாதபுரம்-திருநெல்வேலி-மதுரை மாவட்டங்களில் ஊர்கள் தோறும் சென்று, வரும் கிறிஸ்துமஸ் விடுமுறையில் **26-12-48** முதல் **10-1-49** முடிய இரண்டு வார காலம் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். ஆங்காங்குள்ள அன்பர்கள் கூட்டங்கள் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகின்றோம். அவ்விதம் கூட்டுவதற்கு வசதியுடையவர்களும் சங்கங்களும் **22-12-48**டைக்குள் பின்வரும் முகவரிக்கு எழுதுமாறு வேண்டுகின்றோம்.

சி. இலக்குவனார் எம். ஓ. எல்.
ஆசிரியர் "இலக்கியம்" விருதுநகர்.

இருக்கமுடியும்?

அறிவுக்கேலாத பொய்களை இவர்கள் கதைகளில்நுழைத்திருக்கிறார்கள். இவர்கள் கதையின் தன்மை ஓவியக்காரன் ஒரு படத்தை வரைய அது வேறொன்றாக அமைந்தது போன்றிருக்கிறது.

ஆண்டவன் ஆடையில்லாமல் ரிஷி பத்தினியர்களிடத்திற்குச் சென்றான். அவர்கள் கற்பழிந்தார்கள். திருமால் நாச்சியார் வீட்டில் குச்சு நுழைந்து மட்டையடிபட்டார். வெண்ணெய் திருடினான். சேலையைப் பிடித்திழுத்தான். பின்னலை இழுத்தான். மொத்து வாங்கினான். ஒருவன் பெண்டாட்டியை ஒருவன் தூக்கிக்கொண்டே போய்விட்டான். ரிஷிக்குத் தெரியாமல் மாறுவேடம் பூண்டு உள்ளே நுழைந்து அகலியைப் புணர்ந்து அகமகிழ்ந்தான். ஒன்றுக்கு ஆயிரம் பெற்றான். பலர் முன்னிலையில் சபையில் சேலையை அவிழ்த்தான். ஆடையை, அவிழ்த்துப் போட்டுவிட்டு நீராடினர். சேலையைக் (கண்ணன்) கள்ளன் எடுத்துச் சென்றான். ஆடையில்லாத நிலையில் இரண்டுகையையும் உயர்த்திக் கூப்பித்தொழ— அவற்றைக்கண்டு அவன் (ஆண்டவன்) மகிழ்ந்தான். என்பனவாக சைவசமயத்திலும் வைணவமதத்திலும் எழுதிவைத்துக் கொண்டு, அவற்றையே மதபோதனையாகத் திராவிட நாட்டு இளைஞர்களுக்குக் கற்பித்து, அறிவையும் காலத்தையும் பாழாக்கும் முறையிலன்றோ, கலை நம் நாட்டில் நிலைபெற்றிருக்கின்றது. இவ்விழிநிலை மாறுங்காலமே நாம் முன்னேறுங்காலமாகும்.

இதுவரையிலும் அந்நியன் ஆட்சியிருந்தது. கொடுமைக்காரன், கொள்ளைக்காரன்,வெள்ளையன்ஒழியட்டும்! இது நம்மசர்க்காராயிற்றே. இருந்தும் கல்வித்துறையில் கலை பாழ்பட்டுக் கிடப்பதை இன்னும் விட்டு வைத்திருப்பதா?

அறிவு வேண்டாமா? மானம் வேண்டாமா? தமிழனென்ற தன்னுணர்வு இல்லையா? தமிழன், தமிழ்ப்பண்பாடு என்று பேசிவிட்டால் போதுமா? பதவியேற்றவர் அப்பதவியினால் ஆற்றவேண்டிய பணி எதிர்கால—தற்கால மக்களுக்கு ஏற்றதாகவல்லவா அமையவேண்டும். அறியாமைநிலையில் நம் முன்னோர்களால் கொண்டுவரப்பட்ட பாட்டாளி மக்களை அறிவு நிலைக்குக். கொண்டுவர வேண்டியல்லவா பாடுபட வேண்டும். மீண்டும் மீண்டும் ஆண்டான் அடிமை, பிறப்பால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டை வளர்க்கும். வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் ஆகிய இவற்றைத் தூக்கித் தோளில் மாட்டிக்கொண்டு ஆரியர் செய்த வேலையை நம்மவர் எடுத்துக்கொண்டு ஊரூராய்ப் பொய்ப் பிரசாரம் செய்வதென்ற வெட்டி வேலையைப் பொறுப்புள்ள பதவியிலுள்ள துறவிகள் செய்துவந்தால் இந்த நாடு என்றுதான் உருப்படுவது?

ராட்சதர்களோ அல்லது தேவர்களோ ஒருவருக்கொருவர் போராட்டம் நடத்தியதாகவோ ஒரு தெய்வத்திற்கு விரோதமாக இன்னொரு தெய்வம் சதிசெய்ததாகவோ உபதேசிக்கக் கூடாது. இத்தகைய கதைகளைக் கற்பிப்பவருக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும்.

மனிதர்கள் ஒருவரை யொருவர் நேசிக்க வேண்டும் — ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இவை போன்ற நீதிகளைப் புகட்டுகிற கதைகளையே சொல்ல வேண்டும் என்று விதி (சட்டம்) அமைக்க வேண்டும்.

ஏதோ நம்முடைய குறையை நாம் சொன்னோம். இத்தகைய பணியாற்றக் கல்வித் துறையிலுள்ள கனவான்களுக்கு நாழிகை யேது? திருவண்ணாமலை மடத்துக்கும், திருவாவடுதுறை சந்நிதானத்திற்கும், இந்திப் பிரசாரத்திற்கு வடக்கே காவடி எடுக்கவுமே நேரம் போதவில்லையே. அப் பிராணிகளைப் பிடித்து அவஸ்தைப்படுத்தாதீர்கள். பாபம்—கோபம் வந்தால் பதவியை வீசி எறிந்துவிட்டு மடத்துக்கே போய் விடுவார்கள். ஆமாம்.

தா. அழகுவேலன்.

★

[4ம் பக்கத் தொடர்ச்சி]

என்றபடியே மெள்ள சன்னலைத்திறந்தேன். நீர் ததும்பிய கண்களுடன், அம்மா சுநீதி! உன்மாங்கல்யத்தை மட்டும் கொடு என்றார். நான் அந்தச் சின்னத்தைக்கழற்றி அவர்கையில் கொடுத்தேன். அவர் வாங்கிக் கொண்டு போய்விட்டார். அதைப் பற்றி நான் வருந்த வில்லை. பேசாமல் இருந்ததால் நான் அயர்ந்து தூங்கிவிட்டேன்.

மறுநாள் பொழுது விடிந்தது. கருமாதிக்கு வந்த சனங்கள் பூரா என்னைப் பற்றி என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தார்கள். நான் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. கணவரையும் இழந்து, என்னையும் சித்ரவதை செய்து கொள்ள விரும்பாததால், சமூகம் என்னைத் தூற்றிற்று. அப்பா... அவர்கள் படுத்திவைத்த பாட்டை நினைத்தால் எனக்கு இப்போதும்கூட உடம்பு சிலிர்த்து விடுகிறது. அதுபோகட்டும்.

சனி! பழயநினைவெல்லாம்எதற்கு? இப்படி யெல்லாம் நினைத்துக்கொண்டே யிருந்தால் மனம் மிகவும் சஞ்சலமடைகிறது! அதனால்தானோ என்னவோ, என்மாமி சொல்லுவார்கள்! சுநீதி! நடந்த விஷயங்களைப்பற்றி சிந்திக்காதே என்று... ஆனால், பாழும் மனம் கேட்கிறதா? என்ன என்னவோ தான் எண்ணுகிறது.

ஒரு சமயம் என் அண்ணியிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தேன், அப்போது அவள் சொன்னாள். அண்ணி! (அவள் எனக்கு அண்ணி ஆனால் நானும் அவளுக்கு அண்ணி போலும்) வாழ்க்கை யென்பது ஒரு ஓடத்தை ஒத்தது. ஓடத்தில் செல்லும்போது ஒரு சமயத்தைப் போல் இருக்கிறதா? ஒருவரை ஒழுங்காகக் கொண்டு போய்ச்சேர்த்துவிடும். இன்னொருவர் செல்லும் போது நல்ல புயற்காற்று அடித்தால் அது என்ன செய்யும்? ஆற்றில் முழுகுவதைத் தவிர வேறு வழியில்லை! பாவம் அவர்கள் பேரில் அதற்கு என்ன விரோதமா? இல்லையே! அது அவர்களுடைய துர் அதிர்ஷ்டம். கடைசியில் அவர்கள் தண்ணீரில் மூழ்கி இறக்க வேண்டியதுதான்! அது போலத்தான் நமது வாழ்க்கை ஓடமும் என்றாள்.

அதற்கு நான் சொன்னேன். ஏது அண்ணி! பெரிய அர்த்தத்தைக் கண்டு பிடித்துவிட்டாய் போலிருக்கிறதே. நாம் வயது சென்று இறந்து போவதற்கும், புயற்காற்று அடித்து ஓடம் கவிழ்வதற்கும், என்ன அர்த்தம் என்றேன். அதற்கு அவள் உனக்கு அர்த்தம் தெரியாவிட்டால் பேசாமல் இரு என்றாள். நான் ஒன்றும் அவளிடம் பேசவில்லை. சரி நீ பெரிய அர்த்தத்தைக்கண்டுபிடித்து விட்டாய் என்று மட்டும் கேலி செய்தேன். ஆனால் அவள் சொன்னதின் அர்த்தம் எனக்கு இப்போது தான் தெரிகிறது. ஆம்! வாழ்க்கை யென்பது ஒரு ஓடத்தை ஒத்ததுதான்! எல்லோருடைய வாழ்க்கை ஓடத்தைப்போல் என் வாழ்க்கை ஓடம்மட்டும் இல்லை! நானும் என் கணவரும் உல்லாசமாக எங்கள் ஓடத்தில் செல்லும் போது பயங்கரமான ஒரு பேய்க் காற்று! ஓடம் ஒரு சுழற்றுச் சுழற்றி அந்தத் தண்ணீரில் கவிழ்ந்தது. அந்தப் பாழும் ஆற்றுக்கு என் துணைவர் மட்டும் பலியானார். என்னையும் சேர்த்து விழுங்கி இருந்தால் நான் இப்போது கஷ்டமடையவேண்டியதில்லை.

எனக்குத் திரண்ட சொத்து இருக்கிறது. எத்தனையோ வேலைக்காரர்கள் எனக்குப் பணிவிடை செய்கிறார்கள். நான் என்ன செய்வது? அந்தப் பணிவிடையெல்லாம் என்னைச் சித்திரவதை செய்வதுபோலிருக்கிறது. ஒரு மனிதனைச் சிறையிலடைத்து அவனுக்கு அந்தச் சிறையிலேயே சகல வசதிகளும் செய்து கொடுத்தால் மட்டும் அவன். திருப்தி அடைய முடியுமா? ஒரு வசதியுமில்லாமல் அவன் சுதந்திரத்துடன் வாழத்தான் எண்ணுவான். அதுபோலத்தான் என் மன நிலையும் இருக்கிறது. இதைப்பற்றி நான்பல தடவை, தாய் தந்தையரிடமும் மாமன் மாமி அவர்களிடமும் கேட்டேன். ஆனால் அவர்களுக்கென்ன வந்தது! என்னவோ அவர்கள் செய்யும் வசதியில் நான், திருப்தி அடைவதாகத்தான் எண்ணுகிறார்கள்! அவர்கள் எனக்குச் செய்யும் உபகாரமெல்லாம், மலருடன் மலத்தைக் கலந்ததுபோல் என்றா எண்ணுவார்கள்?........ஒரு போதும் இல்லை! அவர்கள் மட்டுக்கு அவர்கள் திருப்தி அடைகிறார்கள். என்னைப்பற்றி அவர்களுக்கு என்ன கவலை...?

நான் உலகுடன் போராடத்தான் எண்ணுகிறேன். ஆனால் சமூகம் விடவில்லையே! என்னைத்தான கல்லறையில் அடைத்து வைத்திருக்கிறதே! எப்படியாவது இதைக் கடந்து விடுவோ மென்றால் முடியவில்லை! சமூகம் தூற்றும். சமூகத்திற்கு என் வாழ்க்கை பலியா? ஆம்! பெண் பிறவியே இப்படித்தான் கஷ்டப்பட வேண்டுமென்று சமூகச் சட்டத்தின் நீதி! என்று என்னென்னவோ சிந்தித்துக்கொண்டு வெகுதூரம் வந்துவிட்டேன். பணிப்பெண்ணும் என் கூடவே வந்துகொண்டிருந்தாள், அந்தியும் நெருங்கியது. என்ன செய்வது? வீட்டுக்குப் போவதைத் தவிர வேறு வழி இல்லை. விறு விறுவென்று என் காரில் ஏறினேன். வழியில் டிரைவரும் பணிப்பெண்ணும் ஏதேதோ பேசிக்கொண்டே வந்தனர். அதொன்றும் என் காதில் விழவே இல்லை. கார் வீட்டு வாயிற்படியை அடைந்ததும், கீழே இறங்கி உள்ளே சென்றேன். மாமி கட்டிலில் படுத்து இருந்தார். என்னைக் கண்டதும் சுநீதி! மேஜை மேல் ஆபிள் வைத்திருக்கிறேன், எடுத்துச் சாப்பிடம்மா என்றார். என்னவோ எனக்கு ஒன்றிலும் மனம் செல்லவில்லை. பேசாமல் சென்றேன். வழியில் அடுக்களைப்பக்கம் வேலைக்காரர்கள் சலசலவென்று இரைந்து கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. மெள்ள நடந்து என் அறைக்குச் சென்றேன். படுக்கை விரித்திருந்தது. படுக்கையில் படுத்தேன். படுத்தாலென்ன? தூக்கம் வரவில்லையே! நான் விதவை! எனக்குச் சுதந்திரம் இல்லை! இந்த இரண்டே வாக்கியங்கள் என்னைச் சுற்றி ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. ஆம்! இந்த உயிரால் யாருக் கென்ன லாபம்! எப்படியாவது உயிரைப் போக்கிக் கொண்டால்......என்ற நினைவுடன் எழுந்து தோட்டத்திலுள்ள கிணற்றுப் படிக்குச் சென்றுவிட்டேன். அதற்குள் என் மாமியின் குரல் கேட்டது. சட்டென்று குதிக்கச் சென்றேன். பாழும் மாமி என் கையைப் பிடித்துக் கொண்டாரே! அய்யோ! நான் அப்போது சாதாரணக்கைதியாய் இருந்தேன்! இப்போது பாதுகாப்புக் கைதியாகி விட்டேனே! சமூகமே! எனக்கு விடுதலையே இல்லையா...?

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றேன்!

பத்மா:-[சற்று தூரத்தில் முதலியார் வருவதறிந்து] சரிசரி! போ போ!! அதோ அவரும் வருகிறார்!

விஸ்வன்:-[உள்ளேபோகிறான்]

முதலியார்:- [வரும்போதே] என்ன பத்மா! இன்று என் வழி மீது உன்விழி வைத்துக்காத்துக் கொண்டிருக்கிறாயே...?

பத்மா:-பர்த்தா வெளியே போயிருந்தால், என் போன்ற உத்தம பத்தினிகளுக்கு, அவரை எதிர் பார்த்து வாசல் கதவோடு கதவாய் நிற்பதைத்தவிர வேறு வேலை என்ன இருக்கிறது?

முதலியார்:-அட அடா அடா...! என்ன அருமையான பத்தினித் தத்துவம்...? ஆனால் அதேமாதிரி எப்போதும் இருக்க வேண்டாமோ?

பத்மா:- எப்போதும் இருப்பதும் இல்லாததும் புருஷர் நடத்

தையைப் பொறுத்தத்தானே இருக்கிறது! பெண்சாதி மனம் கோணாமல் புருஷனுக்கும் நடக்கத்தெரிய வேண்டாமோ...?

முதலியார்:- ஆகா...பேஷாய் வேண்டும்! இப்போது உன் மனம் கோணும்படியாக நான் ஒன்னும் பண்ணவில்லையே...? இப்படியே இருந்தால்...

பத்மா:- நூகூம்...போதாது...!

முதலியார்:- இன்னும் என்ன செய்வது?

பத்மா:- உம்...! போங்கன்னா...!! நீங்கதான் இன்னும் முகூர்த்தமே நிச்சயிக்காமே இருக்கிங்களே...?

முதலியார்:-எதுக்கடி...?

பத்மா:- என் தம்பி விஸ்வனுக்கும், விமலாவுக்கும் கலியாணம் செய்வதுக்குத்தான்!

முதலியார்:-வேறே...! இப்போ நான் எங்கிருந்து வருவதாக நீ நினைக்கிறே? நேரே ஜோசியர் வீட்டிலிருந்துதான் வருகிறேன்! வருகிற ஞாயிற்றுக்கிழமை காலை 4-30 லிருந்து 5-30துக்குள் நல்ல முகூர்த்தமென்று குறித்துக் கொடுத்திருக்கிறார்.

பத்மா:- அப்படியா...! மகா... ஆனந்தம்! ப்ரமானந்தம்!! மகா ப்ரமானந்தம்!!!

முதலியார்:-யாருக்கடி?

பத்மா:- விமலாவுக்குத்தான்! அதோ அவளும் வந்து கொண்டிருக்கிறாளே!

முதலியார்:- எல்லா ஆனந்தத்தையும் நீயே முடித்து விட்டாயே?

விமலா:- அப்பா! சின்னம்மா ஆனந்த சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்களே! என்னப்பா விசேஷம்?

முதலியார்:- அவள் தம்பி விஸ்வனுக்குக் கலியாணம் நடக்கப் போகிற செய்தியைக்கேட்டுத்தான் அவ்வளவு ஆனந்தப்படுகிறாள்!

விமலா: பெண் யாரப்பா...?

பத்மா:- என் கண்ணே விமலா! நீயேதான்! அதனால்தான் நான் அவ்வளவு ஆனந்தப்படுகிறேன்!

விமலா:- [திடுக்கிட்டு] அப்பா?

முதலியார்:- ஆம். விமலா! உங்கள் இருவருக்கும் நல்ல ராசிப் பொருத்தம் இருப்பதாகவும், முகூர்த்தம் ஞாயிறு காலை 4-30க்கு மேல் 5-30க்குள் மிகவும் மங்கலகரமாக அமைந்திருக்கிறதென்றும் சோசியர் சொன்னார். ஏதோ! தாயில்லாக் குழந்தை! நீ நல்லா இருக்கவேண்டும் என்பதற்காகத்தானம்மா நான் இவ்வளவு தூரம் பாடுபடுகிறேன்...

விமலா:. அப்பா! நான் நல்லா இருக்கவேண்டும் என்று நீங்கள் நினைத்திருந்தால், என் கலியாணத்தைப்பற்றி முதலில் என்னிடம் தெரிவிக்காமலும், என் சம்மதம் பெறாமலும் சோசியர் வீட்டுக்குப் போயிருப்பீர்களா...?

பத்மா:- ஆமடியம்மா! நீ ஒரு பெரிய மனுசி? உன்னைக் கேக்காமல் போனது ஒரு பெரிய குற்றந்தான்...?

முதலியார்:- விமலா! நீ என்னிடம் இப்படிப் பேசுவாயென்று நான் எதிர்பார்க்கவே இல்லை!

பத்மா:- அவளைச் சொல்ல என்ன குற்றமிருக்கிறது? எல்லாம் அந்த இழவு கொடுத்த இங்கிலீஷ் படிப்பல்லவா அப்பா என்றுகூட மதிக்காமல் பேசச்சொல்கிறது...?

விமலா:- அப்பா! சின்னம்மா சொல்வதில்கூட உண்மை இருக்கிறது! நீங்கள் என்னைப் படிக்க வைக்காமல் இருந்திருந்தால், நான் உங்கள் விருப்பத்திற்கு முரணாகப் பேசும் சக்தியோ, சந்தர்ப்பமோ ஏற்பட்டிருக்காது! 'குருடியைப் பிறர் தள்ளாவிட்டாலும், அவள் தானே கைப்பிடிச் சுவரற்ற கிணற்றில் தவறி விழுவது இயல்பு!' ஆனால், நீங்கள் என் அறிவுக் கண்களைத் திறந்து பிரகாசிக்கச் செய்து விட்டபிறகு, 'நான்கு பக்கமும் கைப்பிடிச் சுவருள்ள பாழுங் கிணற்றுக்குள் தாண்டி விழுந்து மாண்டுபோ...' என்று ஏவினால், என் மனம் ஒப்பி எப்படியப்பா சம்மதிப்பேன்...?

பத்மா:- ஏண்டியம்மா...! என் தம்பி விஸ்வனா உனக்குப் பாழுங் கிணற்றுக்குச் சமானமாகத்தோன்றுகிறான்? அய்யோ...! தெய்வமே...!! நான் இப்படி எல்லாம் பேச்சுக்கேட்டுக்கொண்டு இந்த வீட்டிலிருந்து வாழவா செய்கிறேன்...இந்தா பாருங்க! இனிமே...நான் ஒரு வினாடிகூட உயிர் வைத்திருக்க மாட்டேன்...நீங்க உங்க சத்தியத்தைக் காப்பாத்தப் போறீங்களா? இல்லையினா என்னையே தொலைச்சுத் தலையை முழுகப்போறீங்களா......

முதலியார்:- அழாதடி பத்மா அழாதே...! இந்தச் சனியனுக்காக நீயேண்டி தொலையவேண்டும்...? அதற்கு, நம் சொற்பேச்சுக் கேளாத இந்தச் சனியனே தொலைந்தாலென்ன...? ஆமாம்! விமலா! நீ எங்கள் விருப்பப்படி விஸ்வனைக் கட்டாயம் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதித்தே தீரவேண்டும்! இல்லையேல்...நீ எனக்கு மகளுமில்லை நான் உனக்கு அப்பாவுமில்லை...

விமலா:- ஆ! அப்பா...!!

## காட்சி 11.

[வீதி.]

உறுப்பினர்:- புரட்சிக் கவிஞர்.

கதை அமைப்பு:- [ஒரு புரட்சிக் கவிஞர் புரட்சிகரமான பாடலைப்பாடிக் கொண்டு போகிறார்.]

புரட்சிக்கவிஞர்:- (7) [பாட்டு; 'அய்யா சிறுபெண்...' என்ற மெட்டு.]

சுகவாழ்வு இன்பம் யாவும் நம்மின்
செயலெனலாமே
குடியாட்சியதன் மீதில் பொது
உடைமையதாமே
தனிஉடைமைவிட்டோமேல் (சுக)

எண்ணுவதெல்லாம் முடிக்கும்
முயற்சி என்றோதும்—அம்
முயற்சியுடையாரிகழ்ச்சி அடையா
ரெப்போதும்—உயர்
தெய்வத்தினால் ஆகாததும்
முயற்சிபாலாகும்—திருக்
குறளுரைக்கும் தமிழ் மறையை
மறந்து நிற்காதே—தலை
விதியைச் சொல்லாதே (சுக)

வாழ்வதற்கும் வீழ்வதற்கும்
வேறே ஒன்றில்லை—வெறும்
வார்த்தையதைப் பேசி நாளும்
வாழ்வதே இல்லை—நிதம்
வீழ்வதற்கே சாதிபேதம்
விளைத்தனரிங்கே—விழலுக்
கிறைக்கும் பேச்சை விட்டுப்
புரட்சியிலோங்கே—விதியை
நம்புவதோ தீங்கே (சுக)

-(۞)-

## திருமணம்.

திருமலாபுரம் தோழர் டி. எஸ். சுப்பய்யா வாசுதேவநல்லூர் தோழியர் பி. பார்வதி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்தம் 5—12—48-ம் நாள் திருமலாபுரத்தில் நடைபெற்றது. இதன் நினைவாக குடி அரசுக்கு நன்கொடை ரூ. 1—0—0-[வரப்பெற்றேம் நன்றி, ஆ—ர்]

ரோஜா முத்தையா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டம் குன்றுகளால் சூழப்பட்டு உயரமான இடமாக விளங்குகிறது. சிட்டாமச்சி என்ற டோக்கியோ நகரின் ஒரு பகுதி, பள்ளமாகவும், சுமிதா என்ற நதியாலும் அதன் கால்வாய்களாலும் பல சிறு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுமிருக்கிறது.

கேந்திர ஸ்தலங்களும், செல்வர்கள் வாழுமிடங்களும் குன்றுகளிலும், நடுத்தரமக்கள் குன்றுகளின் சரிவுகளிலும், மற்றவர்கள் சமவெளிகளிலும் பெரும்பாலும்வாழ்கின்றார்கள். டோக்கியோவின் முக்கிய பாதைகள் மிகவும்அகன்று அழகாகக் காட்சியளிக்கின்றன. பாதைகள் பெரும்பாலும் கற்களால் பரப்பப்பட்டு 'கான்கிரீட்'டால் மூடி, நீண்ட காலத்திற்கு உழைக்கக் கூடியதாகப் போடப்பட்டிருக்கின்றன.

தொழிலாளர்கள் நெருப்புப்பெட்டி மாவீடுகளில் பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள பிரதேசங்களில் வாழ்கின்றார்கள். தொழிலாளர்களின் வீடுகள் பெரும்பாலும், தகரம், மூங்கில், களிமண், நெருப்புப்பெட்டி மரம் முதலியவைகளாலேயே கட்டப்பட்டு, சீதோஷ்ணத்திற்குத் தகுந்தாற்போல் அமைத்துக் கொண்டிருப்பதால், வேண்டிய இடங்களுக்கு வீட்டைத் தூக்கிக்கொண்டே சென்று விடுகிறார்கள்.

சிறிது செல்வர்களாக இருப்பவர்களின் வீடுகள், கண்ணாடிகளுக்குப் பதிலாக அட்டையை உபயோகித்து அமைக்கப்பட்ட மின்சார விளக்குகளுடனும், இரண்டு மின்சார அடுப்புள்ள சமையல் அறையுடனும்,தண்ணீர்க்குழாயுடனும், வெந்நீர்க் குழாயுடனும் அமைக்கப்பட்டிருக்கும். வெந்நீர் விநியோகத்தின் மத்திய நீர் காய்ச்சும் இயந்திரம் நகரத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கோடைக் காலங்களில் பெருவாரியான டோக்கியோ மக்கள் குளிர்ச்சியான இடங்களுக்குச் சென்று உல்லாசமாகக், காலத்தைக் கழித்துவருவார்கள். நகரத்தின் பல பாகங்களிலும் மக்கள் நல்ல காற்று வாங்கவும், ஓய்வு நேரங்களைக் கழிக்கவும் அழகிய பூங்காவனங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உயிர் வாழ் மிருக தாவரக் கண் காட்சிசாலைகளும் மிகப்பெரிய அளவில் நல்ல முறையில் அரசாங்கத்தாரால் வைத்து காப்பாற்றப்படுகின்றன. ஹிபியா என்ற பூங்காவில் உலகத்தின் எல்லாவித மக்களையும் மாலையில் உலவக் காணலாம். அந்தப் பூங்காவில் ஒரே சமயத்தில் 50,000-மக்கள் கூடி அரசியல் சொற்பொழிவுகளைக் கேட்டு வருகிறார்கள்.

நகரத்தின் மத்தியில் அழகிய அமைப்புகளுக்கிடையே இம்பீரியல் அரண்மனை இருக்கிறது. இது ஏடா குடும்பத்தினரால் கட்டப்பட்ட பழைய அரண்மனை. அந்த அரண்மனையில் தான் ஜப்பான் சக்கரவர்த்தி வசித்து வருகிறார். அந்த அரண்மனையின் பக்கமாகப் போகின்றவர் எவருமே சக்கரவர்த்தியை எறிட்டும் பார்க்கக் கூடாது. அந்த அரண்மனையை விட வேறு உயரமானது அதன் அருகில் வேறு ஒன்றுமே இல்லை.

டோக்கியோவில் சுமார் 2000-கட்டடங்கள் மிகப்பெரியதாக, புது முறையில் கான்கிரீட்டைக் கொண்டு கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் நான்கு அரசாங்கத்திற்குச் சொந்தம்.

டோக்கியோவில் போக்குவரத்து முறை மேற்கத்திய நாடுகளைப் பின்பற்றியதாய் மிக உயர்தரமானது. டோக்கியோவில் மிகவும் அகலமானபாதை ஜின்ழா என்பது. இதில் போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் அதிகமாகயிருப்பதால் மழைக்காக வேண்டியும் நிழலுக்காக வேண்டியும் பந்தல் போல் முழு நிலத்திற்கும் போடப்பட்டிருக்கிறது. இது போல மற்றெந்த நகரத்திலுமில்லை. இப்பாதையில் தான் புகழ்பெற்ற பிராங் லோயிடு ரைட் என்ற அமரிக்க சிற்பியால் அமைக்கப்பட்ட ஓட்டலும் இருக்கின்றன. இந்த இம்பீரியல் ஓட்டல் மிகவும் உயர்தர இஞ்சினீரிங் முறையில் 60-ஆழத்திலிருந்து கட்டப்பட்டு 'கான்கிரீட்' ஊசிகளின் மேல் மிதக்கவிடப் பட்டிருக்கிறது. 1923-ல் எழுந்த மிகப்பெரிய பூகம்பத்தினால் டோக்கியோ நகரத்தின் மூன்றில் ஒரு பகுதி அழிந்தும், இந்த ஓட்டலில் ஒரு துளி கூடப்பாதிக்கப்படாமலிருந்ததிலிருந்துதான், இது கட்டப்பட்டதின் திறமை அறியப்பட்டது.

ஜப்பான் மக்களுக்குக் குறிப்பிடத்தக்க முக்கிய க்ஷேத்திரம் டோக்கியோவிலுள்ள யசுகுனி மசூகி. இது இம்பீரியல் அரண்மனைக்கு வடக்கில் ஒரு குன்றின் நுனியிலிருக்கிறது. இது போரில் உயிர்விட்ட வீரர்களின் ஞாபகச் சின்னமாகக் கட்டப்பட்டது. அங்கு சென்று வணங்குவதால் இறந்த வீரர்களின் ஆத்மசக்தி அழியாத வீரத்தோடு திகழ்கிறது என்ற நம்பிக்கை அந்நாட்டு மக்களுக்கு இருந்து வருகிறது.

நிர்வாகத் துறையிலிருக்கும் சிக்கலைத் தீர்க்கும் பொருட்டு டோக்கியோ நகரம் 15-மாவட்டங்களாகவும் 8-உப மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் வசதியை நகராண்மையாரே ஏற்று நடத்துகின்றனர். பாதுகாப்பு, தீ அணைக்கும் யந்திர சாதனங்கள் முதலியவைகள் போலீஸ் மேலதிகாரியின் பார்வையிலிருந்து வருகிறது. டோக்கியோவில் தீயினால் ஏற்படும் ஆபத்து மிகப் பயங்கரமானது. தீயினால் சேதம் ஏற்படுமானால் அதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கு மரண தண்டனைதான். 1923-ல் தீயினால் ஏற்பட்ட ஆபத்தினால் 74,000-மக்கள்மரணமடைந்தனர்.

ஜப்பான் நாட்டிலேயே டோக்கியோ நகரந்தான் அதிகமான மக்கள் விகிதாச்சாரத்தையும், உற்பத்தியையும் கொண்டது. 1938ல் 1,000,000 கட்டடங்கள் உடையதாக இருந்தது. அவைகளில் 14,000 மத்திய தொழிற்சாலைகளாகவும் 500,000 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடியதாகவுமிருந்தன.

தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களில் சரிபாதி வயது வந்த பெண்களாகவும், கால்பாகம் 20 வயதுக்குட்பட்ட பெண்களாகவும், கால் பாகம் 20 வயதுக்குட்பட்ட ஆண்களாகவுமிருந்து வருகின்றார்கள். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்கள் முழுக்கால் சட்டைகள் அணிந்து கொண்டு இடுப்பிலும், குதிக்காலிலும் அகலமான ஒட்டியாணம் (belt) அணிந்து கொள்வார்கள். இவ்விதமான உடைகள் பெண்கள் வேலை செய்வதற்கு மிகவும் சுலபமாகவும், தீ பிடித்தால் ஓடி

ஆடிவேலை செய்வதற்குச் சுலபமாகவும் ஆபத்து எற்படாமலிருப்பதற்கு மிகவும் சாதகமாக இருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் ஒரு நாளில் 10-லிருந்து 11-மணி நேரம் வரையில் வேலை செய்கிறார்கள். மாதத்தில் இரண்டு நாட்கள்தான் விடுமுறை அனுமதிக்கப்படுகிறது.

நகரத்தின் சுகாதாரத்தைக்காப்பாற்றிக்கொள்ள, ஒவ்வொரு பகுதியையும் அந்தந்தத்தெருவிலுள்ளவர்களே வீடுகளையும் தெருக்களையும் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். பள்ளிக்கூடங்களும், வியாபார ஸ்தலங்களும், தொழிற்சாலைகளும், அவைகளின் பொறுப்பாளர்களின் பொறுப்பிலேயே அவைகளின் சுகாதாரமும் விடப்பட்டிருக்கிறது. நகரத்தின் எந்தப் பகுதியிலும் சுத்தம் செய்வதற்கென்று நகரசுத்தித் தொழிலாளர் நியமிக்கப்படுவதேயில்லை. அரசாங்க அலுவலகங்களிலுள்ள உயர்தர உத்தியோகஸ்தர்களும் அவரவர்களின்வீடுகளையும் அலுவலகங்களையும் அவரவர்களே சுத்தம் செய்து கொள்ளவேண்டும். இது அரசாங்கத்தின் கண்டிப்பான உத்தரவு. அவரவர்களின் வேலைகளை அவரவர்களே செய்து கொள்ளுவதில் கௌரவக்குறைவு ஏற்படுகிறது என்று அம்மக்கள் கருதுவதில்லை. சுகாதாரம் மக்களின் பொறுப்பிலேயே விடப்பட்டிருப்பதால், தெருவை எவரும் அசுத்தம் செய்யவே மாட்டார்கள். தனிப்பட்ட முறையில் யாரேனும் தெருவில் அசுத்தம் செய்வதைப்பார்த்தால் தெருவிலுள்ளவர்கள் சும்மா விடமாட்டார்கள். கூட்டாகப்பலர் அசுத்தம்செய்வார்களானால் அதற்காகக்கிடைக்கும் தண்டனையிலிருந்து யாரும் தப்பிவிட முடியாது. இதனால் தெருவில் மலம் கழிப்பதோ சிறு நீர் கழிப்பதோ குப்பை கூழங்களைத் தெருவில் கொட்டுவதோ, 'சிகரெட்' துண்டுகளை எறிவதோ போன்ற செயல்களை எவரும் செய்வதில்லை. அசுத்தத்தின் காரணமாக வியாதி ஏற்படுமாயின் தண்டனை அவர்களுக்கு உண்டு. சுகாதார விஷயத்தில் இந்த முறை எங்க நாட்டிலும் கையாளப்படுவதில்லை. யுத்த காலத்தின் போதுதான் மேற்கத்திய நாடுகள் சில இந்த முறையைக் கையாள ஆரம்பித்தன. சுகாதார விஷயத்திலும், இன்னும் மற்ற மக்களின் நலனைக் கவனிக்கும் விஷயங்களிலும் ஏராளமான நல்லமுறைகளாக மற்றெந்த நாடுகளிலும் கடைபிடிக்காதவைகள் உண்டு. அவைகளை எடுத்தியம்பினால் ஏடு இடங்கொடாது என்ற எண்ணத்தினால் இத்துடன் நிறுத்தவேண்டியிருக்கிறது.

உணவுப் பொருள் விஷயத்தில் மிகவும் கண்டிப்பான முறை கையாளப்படுகிறது. டோக்கியோவில், உருளைக்கிழங்கு, உப்பு இவைகளைத்தவிர மற்றெல்லாப் பொருள்களும் ரேஷன் முறையில் வழங்கப்படுகின்றன. கள்ளமார்க்கட்டோ, கொள்ளை லாபமோ நேர்ந்து விடாமலிருக்கவேண்டி, இந்தப் பொறுப்பை போலீஸ் இலாகாவே கவனித்து வருகிறது. பாதுகாப்புக்காகவேண்டி டோக்கியோ 80 சிறு பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் வழிப்பறி இருட்டில் கொலை, திருட்டு, கடத்திச் செல்லுதல் போன்ற குற்றங்கள் நடந்துவிடா வண்ணம் மிகக் குறிப்பாகக்கவனிக்க முடிகிறது.

இங்கு வாழ்கின்ற மக்கள் மிகவும் உழைப்பாளிகள். எந்த நாட்டினரும் உபயோக மற்றது என்று குப்பையில் எறிந்த பொருள்களிலிருந்துகூட மிகவும் உபயோகமான பொருள்களைச் செய்யும் நுண்ணறிவு கொண்டவர்கள்.

லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக்கிடக்க, விவசாயம் செய்து வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்ய முடியாமல், உணவுப் பொருள்களுக்காக வேண்டி அந்நிய நாட்டவரின் ஆதரவை நாடிநிற்கும் நாம், விவசாயத்திற்கு, வேண்டிய நிலமில்லையே என்று கடலையும் நிலமாக மாற்றி விவசாயம் செய்ய வேண்டிய பொருளை விளைவித்து வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வரும் ஜப்பான் நாட்டைப்பற்றி ஏட்டிலாவது அறிந்து கொள்ள வேண்டாமா?


# குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்மராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-
நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE